KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V7. No. 35   6.9.1934.

JL
m211, N28kN
N34.7.35
199185

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஞு செப்டம்பர் மீ 6உ [No. 35

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 545
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன்தூதுச் சருக்கம். 547
3 சூளாமணி (குமாரகாலச் சருக்கம்)
வித்துவான் T. P. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை M. A. B. L. 549
4. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 551
5. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 553
6. ஐயமும் அமைதியும்
P. இராமாநுஜன் 555
7. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்)
W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, & ஆஷாதேவி M. A. 557
8. மலர்வனம் (நகைவெடி)—மதுகரம் 559
9. வர்த்தமானம் 560

கலாநிலயம்

எத்தைக்கண்டு இச்சை கொள்வோம் 4.

விஷய அறிவை வளர்க்கின்ற பூதசாத்திரப் பயிற்சியிலும் தத்துவ ஆராய்ச்சி ஒருசிறிது உயர்ந்தது. எனினும், அத் தத்துவ ஆராய்ச்சியினுஞ் சிறந்தன கடவுளைக்கருத்துட்கொள்ளவைக்கின்ற சமயநெறிகளே. ஆதலாற்றான், பண்டைய நாட்களில் மேனாட்டோர், மனிதரது இம்மைவாழ்க்கையானது ஒன்றனுக்கும் உதவாத வீண் துன்பமே என்றுகொண்டு மண்ணுலகத்தில் அவருடைய நோக்கத்தை வைக்கவேண்டாவென்று விலக்கி, மறுமையிற்றானே அவர் நல்வாழ்க்கை யெய்த இயலும் என்னும் நம்பிக்கையினூன்றி, கடவுளினருளால் விண்ணுலகத்தையே அவர் எதிர்பார்த்திருக்கும்படி தம் சமயங்களின் மூலமாகப்போதித்தனர். பண்டைய இந்தியர்தம் நோக்கமும் இன்னவாறு அமைந்திருந்ததுபோல் மேற்பார்வைக்குத் தோன்றுகின்றதெனினும் உண்மையிலிவர் இம்மை வாழ்க்கையை இகழ்ந்தவரல்லர். இம்மையே அனைத்துமென்று கொண்டாடி முடிந்துவிடாமல் இவ்விம்மைக்குரிய இடத்தை இதற்குத்தந்து மறுமை எய்தி வாழ்வதற் கேற்ற பயிலிடமாக இதனைக் கருதி அக்கருத்திற்கு இயன்றபடி அவரவர் தர்மங்களை நடத்துவார்களாயின் இம்மை இவர்களுக்கு அளிக்கின்ற நல்வரங்களை ஏற்றுக்கொண்டு இனிது வாழலாமென்றனர். இவ்வேற்றுமை எதுவாயினும் பண்டை நாள் கீழ்நாட்டவரும் மேனாட்டவரும், விஷய அறிவுகளை வளர்க்கின்ற இப் பூதசாத்திர ஆராய்ச்சிகளைத் தாம் வாழும் ஊரின் எல்லைக்குமப்பால் ஓட்டிவைத்திருந்த வகையில் பெரிதும் ஒத்திருந்தனர். ஆன்மாவை மூளையாகவும், உயிரைச் சடமாகவும், மனுஷத்வத்தை மருந்துகளாகவும், மதியையோ விதியாகவும் இழியும்படி செய்து தான் தொட்டதையெல்லாம் பாழேயாக்குகின்ற இந்தப் பூதசாத்திரப் பயிற்சியும் அறிவும் ஆராய்ச்சியும் எமக்கு வேண்டா, என்ற மெய்வீரர் நம் முன்னையோர். இக்காலத்து அறிவுமிக்க அறிவிலிகள் சிலர், இதனை உணர்ந்திலர். ஆதலின், நம்முன்னோர் வாழ்க்கைக்கு உரிய சாதனங்களைச் செய்துகொள்ள மாட்டாமலும், உயிர்வாழ்க்கையின் உண்மைகளைத் தெளிந்துகொள்ள மாட்டாமலும், ஏழ்மையிலும் மூடநம்பிக்கைகளிலும் உழன்றனர் என்று பரிகசிப்பார் சிலர், பரிவு கூர்வார் சிலர். இப்படிப் பரிவு கூர்கின்றவர், இப்பொழுது தெரிந்திருப்பதவ்வளவும் அற்றைநாளிலுந் தெரிந்திருந்ததெனக் காட்டி அவர் மானத்தைக்காப்பதற்குப் பற்பலவாறு முயலவும்முயல்வார். அவமானத்தையே மானமாகக் கொள்வதனினும் இரங்கத்தக்க நிலை வேறொன்றில்லை. சாத்திரப்பிரகாரமே சாகவேண்டுமென்று ஆசைகொள்ளும்படி எல்லாம் மயக்கமின்றித் தெரிந்துகொண்டுவிட்ட இக்காலத்தவர்களை உய்விக்கவல்ல ஊக்கமுடையவீரர்களை இவ்வுலகிற்குத் தந்தருளும்படி கடவுளை வேண்டி வேண்டி வணங்குவார் நல்லோர். அறிவாளி என்ற அவ்வடைமொழிபடுத்தே எப்பொழுதும் வழங்கப்பெறுகின்ற ஸாலமன் என்பவர் ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன்னமே, "அறிவை வளர்த்துக்கொள்கின்றவன் துக்கத்தையே வளர்த்துக்கொள்கின்றான்" என்றுவருவதுணர்ந்து சாற்றிய வாய்மையை மறந்தமையாற்றானின்று மனிதர் இப்படி மாய்கின்றனர்.

இதுகாறும்உரைத்த இவையனைத்தும் நம்மையும்

நாம் நடமாடும் உலகத்தையும்பற்றிச் சிந்திக்குந்தோறும் சித்தத்தைச் சாலக் கலக்குந் தரத்தன. ஆயினும் இவ்வகை எண்ணங்களாற் சிறிது கலங்குவதால் நன்மையேயொழியத்தீதில்லை. வில் டூரான்ட் அனையைத்தனையோபலர் கலங்குகின்றனர். இன்னுமெத்தனையோ பலர் கலங்கவுந் தெரியாமல் இதயமெல்லாம் கல்லாக இறுகிக்கிடக்கின்றார். நம் பண்டைய இந்தியவாழ்க்கையிலோ இத்தகைய ஓர் கலக்கங்கொள்ள இடமேயில்லை. இன்றைக்கும், அவ்வறிவு ஒழுக்கமுங்குறைந்தகாலத்தும், அம்மரபின் பயனைக் கலக்கம் எய்தாமல் இந்தியர் காக்கப்பெற்று வருகின்றனர். ஆயினுந் தற்கால அவநம்பிக்கைகள் அன்னவர்களையும் மெல்ல மெல்லச் சென்றடையத் தலைப்படுகின்றன. இந்நிலையில் நாம் கருத்துட்கொள்ளவேண்டிய முக்கியமான விடயங்கள் சில உண்டு. அவைகளே, வில் டூரான்டின் கடிதத்திற்குத் தக்க விடையும் ஆகும்.

வில் டூரான்டும் அவர் போன்ற நிலையில் இருக்கின்ற கல்விமான்களிற் பற்பலரும் ஒரு பெரிய பிழை செய்கின்றனர். இந்தப் பிழையின் தன்மையை முதலில் தெரிந்துகொள்ளவேண்டுவது மிகவும் அவசியமாகின்றது. இந்த உலகமும் அதன் நடமாட்டங்களும் எல்லாம் அநித்தியமானவென்றும் இதனுள் நம்முடைய வாழ்க்கை நிழலற்ற கனவென்றும், ஆதலின், வருந்தி வருந்தி மனிதன் முயல்வதெல்லாம் பிள்ளைமதியின் பேதைமையேயென்றும் ஒவ்வொருபோது மயங்குவது யாவருக்கும் இயற்கையேயாம். இந்தஇரண்டொரு நூற்றாண்டுகளாக, பூதசாத்திர நிபுணர்களும், உயிர் நூல்நிபுணர்களும், மானதசாத்திரநிபுணர்களும் தாம் கண்டுபிடித்துவிட்டதாக விளம்பரங்கள் செய்கின்ற 'உண்மைகள்' வெளிப்படும்முன்னமே இத்தகைய சிந்தனைகள் சிற்சில ஆங்காங்குத் தோன்றியிருக்கின்றன. ஷேக்ஸ்ப்பியர் எழுதியுள்ள "காற்றுமழை" என்னும் நாடகத்தின் முக்கிய பாத்திரமாகிய ப்ராஸ்ப்பீரோ வென்பவன் இக்கருத்தை எடுத்துரைத்திருக்கிறான். இது புதிய செய்தி யென்று வில் டூரான்ட் வருத்துக் காட்டுகின்ற இம்மனநிலை அதனின்வேறானது. இவர், பண்டைநாளில், வாழ்வும் அவ்வாழ்விற் காதாரமாய ஆன்மாவு மவ்வான்மாவின் தலைவனாகிய கடவுளும், மெய்ம்மை என்று பொய்யே எண்ணி வீணான பித்தர்களாக மனிதர் மயங்கிக் கிடந்தார்கள் என்றும், இப்பொழுது அனைத்துஉண்மையையும் சாத்திரத்திறனாய்ச்சிகளால் கண்டுபிடித்தமையால், அப்பொய்களெல்லாம் வெட்டவெளி ஆய்விட்டன வென்றும், அதனால், பண்டைய மயக்கங்கள் அளித்திருந்த ஆறுதல் சமாதானங்களை மனிதர் இனி நம்புதற்கில்லையாதலின், "அவமானமான ஒருபிரசவத்திற்கும் படுநாசமாகின்ற ஒரு மரணத்திற்கும்" இடையே கிடக்கும் இந்த மனித நடமாட்டத்திற்கு எவ்வகைப் பொருளும் எவ்வகைப் பயனுங் காணமாட்டமல், துன்பமயமான இவ்வுலகில் துக்ககரமான மனத்தினுடன் எங்ஙனம் வாழ்வோ மென்றும் விளம்புகிற இதுவே புதியதாம். இப்படி விளம்புகின்றவர்களில் இருதிறத்தவ ரிருக்கின்றனர். ஒருதிறத்தவர், நல்லன வொன்றுமே தம் மனத்திலே சேர்த்துக்கொள்ளாமையால், இழந்துவிட்ட அவர் நம்பிக்கைக்கு மாற்றொன்றுங் காணமல், தின்கிறவரையில் தின்றுதீர்த்து ஆடுகின்றவரையில் ஆடி ஒய்ந்து போகின்றபோது போய்விடுதலென்னும் நினைவினர்களாய், நியாயம் அநியாயம் தர்மம் அதர்மம், புண்ணியம்பாவம்என்னும்வேற்றுமை எதனையும் எற்றுக்கொள்ளாதவர்களாகி, தம்முடைய ஆசைகளை நிரப்புவதற்கு எல்லாவழியுந் தக்கதே என விவகரிப்பவர். இதனால் தாம் எண்ணியபடி சுகப்படலாம் என்று அவர் எதிர்பார்ப்பதுண்டு. தீவினைக் கஞ்சித் தருமநெறி நடக்கின்ற சிலர், தாம் படுகின்ற துன்பங்களைக் காணுந்தோறும், எனையவர் சுகப்படுகின்றார்கள் எனமதித்து, "நல்லவர்களுக்கிது காலமில்லை" என்றும், தருமத்திற் கடங்காமல் தத்தம் மனம்போனபடி செல்லும் நெறியே சுகமுடையதென்றும் பேசுவதையும் கேட்கின்றோம். இதனினும்பொய்ம்மை வேறில்லை. நன்னெறி நடக்கின்றவர்களுக்கு எத்துணை இடுக்கண்களும் துன்பங்களும் நேர்கின்றனவோ, அத்துணையும் அதற்கதிகமும் மற்றவர்களுக்கும் நேர்கின்றன என்னுந்தன்மை சிறிதளவுசிந்தித்தாலும் புலப்பட்டுவிடும். ஆதலின் அன்னவர் ஒருநாளும் சுகப்பட்டதுமில்லை இனியொருபோதும் அந்நெறியினிற் செல்லும் வரை சுகப்படப் போவதுமில்லை.

இவர்கிடக்க மற்ற திறத்தோர் நம் மதிப்பிற் குரியவர். உயிர்வாழ்க்கைக்கு ஆதாரமாயிருந்த பண்டைய நம்பிக்கைகளெல்லாம் மூடநம்பிக்கைகளென்று இப்பொழுது உலகங் கண்டுபிடித்துவிட்டதாகக் கருதியிருக்கின்ற 'உண்மையினால்' தெளிந்துவிட்டவர்களில் சில சிந்தனையாளர், "இவ்வாறு ஏன் தெளிந்தோம், இதனால் துன்பமொழிய இன்பத்தைக் காணேமே" என்றுசஞ்சலப்படுவாராகின்றார். "கொடிது கொடிது, உண்மையைத்தேடப்போவோர் அதனைக் கண்டுபிடித்துவிடுகின்றார்களே அதுவே மிகக் கொடிது" என்று, ரேமி டி கௌர்மான்ட், என்றவோர் பிரான்ஸு தேயத்தறிஞர் கதறுகின்றனர். முன்னே காட்டியிருக்கின்றபடி, பூதசாஸ்த்திரங்களும், வானசாஸ்திரமும், பூமிசாஸ்திரமும், மானதசாஸ்திரமும், சரித்திர ஆராய்ச்சிகளும் நமக்கு இப்பொழுது இவ் வுண்மைகளைத் தேடித் தந்திராவிட்டால், என்றும்போல் நாம் கடவுளினும் சமயநெறிகளினும் வைத்திருந்த நம்பிக்கைகளையே பின்பற்றி இனிது வாழமாட்டோமோ! இவ்வுண்மைகள் இடைவந்ததாலன்றோ அம் மூடநம்பிக்கைகளைநாம் கைவிட்டுவிடவேண்டியது இன்றியமையாததாயிற்று. அந்த நம்பிக்கையில் இருந்தஇன்பம் இந்த அறிவினால் வாய்க்கவில்லையே! இனி, இழந்த அந்நம்பிக்கையை மீண்டும் பெறுவதென்பதோ இவ்வுண்மைகளுக்கு எதிராக ஒருநாளும் இயலாதே!— என மாழ்குவார். இத்தகையவர் மனநிலையை

"Quoique mort a la foi qui m'assurait de Dieu
Je regrette toujours la volupte de croire."

[கடவுளை உறுதிசெய்த நம்பிக்கைக்கிணங்கமாட்டாமல் மாண்டவன்போ லாய்விட்டேனானாலும், அந்நம்பிக்கையின் இன்பங்களை நினைத்துநினைத்து, நான் இறுதிவரையில் புலம்புவேனே]

என்றுகூறும் க்யூரின் என்னுமோர் பிரன்சுக்கவி செவ்விதின் விளக்குகின்றார். இவ்வகை மனநிலை வாய்ப்பதன்காரணம் மிகவும் நுட்பமானது. மற்றதெல்லாமெவ்வாறாயினும் மானுடமனமானது தன்னை அறியாமலே அழகினை நாடிச்செல்லுகின்ற ஓர் அவாவினையுடையது. இந்த அழகின் அவாவிற்குக் கடவுளைப்போல் இலக்காகக்கூடிய கருத்து வேறொன்று இல்லை.

m211,N28KN
1991

அவ்வழகினை நம்முடைய உடைமையாக்குகின்ற சமயநெறிகளும் அத்தகையனவே. இந்தக்கொடிய 'உண்மைகள்' புகுந்து அவ்வழகிய நம்பிக்கைகளின் வேர்களைப் பறித்தாலும், மலரை நீக்கியபின்னும் மணங் கமழ்வதுபோல், அவ்வழகின்நினைவு முற்றிலும் அழிவது அருமையினு மருமை. ஆதலின், அந்நம்பிக்கைகள் இவ்வுண்மைகளால் தளர்ந்தபோதும், அந்த அழகே, இவ்வுண்மைகளையும் கடந்தவொருவுண்மையேபோலும் என்று அதிசயிக்கவேண்டி நேர்கின்றது. இத்தகையினோர் மெல்லமெல்லத் தம் பண்டையநம்பிக்கையேதஞ்சமெனமீள்வதும்இயலும். இப்படிவிடாப்பிடியாக வாதாடிக்கொண்டிருக்கின்ற அந் நம்பிக்கைகள், இடையி லிவ்வுண்மைகள் புகட்டிய கொடுமையைப்புறங்கண்டு வெற்றிபெறும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு உறுதிகொள்வதற்கு வேறு ஒரு காரணமும் இருக்கின்றது.

பண்டு மறுமையைச் சார்ந்து கொண்டிருந்த நம்பிக்கையொன்றிற்கும் ஆதாரமில்லை என்றுகூறுபவர் இப்பொழுது இவர் கண்டுபிடித்துவிட்டதாகக் கொண்டாடும் 'உண்மைகள்' தாம் உண்மையென்று என்ன நிச்சயம்? ஏனோ இதனை எல்லோரும் மறந்துவிடுகின்றனர்! 'கடவுள், ஐந்துபூதங்களையும் சராசரங்களையும் மறைகளையும் அறிவையும் சைவம் முதலாம் சமயங்களையும் வகுத்து, மேற் சமயங்கடந்த பொருளாகி நிற்கின்றார்" என்பதைப் பொய்யென்று பகர்ந்து, தற்கால பூதசாஸ்திரங்களின் முடிவுகளை மெய்யென்று கூறத்துணிவதன்முன், இவைகளை உண்மையென்று, கொள்வது கிடக்க, கூறுவதற்கேனும் ஆதாரம் இல்லையே. எனெனில், இன்னும், உயிர்ப்பிராணிகளின் அமைப்பு வளர்ச்சி சரித்திரங்களைப்பற்றி எத்தனையோ பேசுவார்களானாலும், உயிர் என்பது இன்னதேயென அதன் தன்மையைத் தெரிந்துரைக்கத் துணிகின்ற நிபுணன் ஒருவனுமில்லை. அவ்வாறே, ஜடப்பொருள்கள் மின்சாரம் முதலிய சக்திகள் ஆகியவைகளின் தோற்றம் மாற்றம் முதலியவைகளைப்பற்றிப் பூத சாஸ்த்திரி ஒருவனுக்கேனும், ஜடம் (Matter) என்பது என்னவென்றேனும், சக்தியென்பது என்னவென்றேனும் எள்ளளவேனும் தெரிந்தபாடில்லையே. மானதசாத்திர ஆராய்ச்சியைக்கொண்டு அதன் இயக்கத்தைப்பற்றி வாய்கிழியப் பேசுகின்ற நிபுணர்களில் ஒருவனுக்காவது, நாம் இருக்கின்றோம் (Consciousness) என்று நினைக்கின்றஅந்நினைவின் தன்மை இன்னதென்பது சற்றேனுந் தெரியாது. இப்படி உயிரென்றால் இன்னதென்று தெரியாது, உடலென்றால் இன்னதென்று தெரியாது, அறிவென்றால் இன்னதென்று தெரியாது என்று விளம்பிக்கொண்டே, இவ்வுடல் உயிர் அறிவுகளுக்குத் தலைவனாகிய ஒருகடவுளும் ஆன்மாவும் பொய்யாகிவிடும்படி உண்மைகள் கண்டுபிடித்துவிட்டோம் என்று பேசுவதைக் கேட்குங்கால், சிரிப்பதோ அழுவதோ என்று தெரியாமல் தயங்கவேண்டி நேர்கின்றது. இதுகாறும் ஒருவரும் ஒரு உண்மையையும் கண்டுபிடிக்கவில்லை கண்டுபிடித்தல் என்பது, மறைந்திருந்த ஒன்றை வெளிப்படுத்துவதாம். மற்று இவர்கள் எதனையோ தாம் தம்முடைமுயற்சி அறிவு முதலியவைகளுக்குத் தக்கபடி ஒன்றினைக் கற்பனை செய்து, அதனைத் தாம் கண்டுபிடித்த உண்மையாகக் கருதி மோசம் போகின்றனர். கடவுளையும் சமயங்களையும் மனிதர்களுடைய கற்பனைகள் என்று கழித்துவிட்டு, கடவுளும் ஆன்மாவுங் கிடக்க, அவர் கையாளும் உயிர் உடல் மனங்களைப்பற்றியும் யாதேனுமறியா வெறும் துரும்பினர் எனத்தக்க இவர், தம்முடையகற்பனைகளைத் தாம்கண்டுபிடித்தஉண்மையாகக் கொண்டாடச்சொல்வதும், அதனைக் கேட்டுக் கொண்டாடுவதும் நேர்கின்ற இந்த விபரீதத்தை யாரிடத்தில் உரைசெய்தாறுவோம்! இத்தைக்கண்டா இச்சை கொள்வது.!

தமிழ்ப்பாடம் 135.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[533-வது பக்கத் தொடர்ச்சி]

மலர்பயில் வாவிதோய் மாதர் நுண்டுகி
லலைபுன லனைதலு மல்கு றோன்றலாற்
கலைவலான் கண்முகிழ்த் தேகக் காண்குறான்
முலைமுக டழுந்தற வொருத்தி முட்டினாள். 34

(உரை). மலர் - மலர்கள், பயில் - நெருங்கியுள்ள, வாவி-குளத்தில், தோய்- முழுகி விளையாடும், மாதர் - மாதர்களுடைய, நுண் - மெல்லிய, துகில் - வஸ்த்திரங்கள், அலை-அலைகளையுடைய, புனல் - நீரால், நனைதலும் - நனைந்ததால், அல்குல் -அல்குல்தடமானது, தோன்றலால் - தென்படவே, கலைவலான் - கலைகளில் வல்லவனாகிய நளன், கண்முகிழ்த்து - தன் கண்களை மூடிக்கொண்டு, ஏக- நடந்ததால், காண்குறான்-(எதிரேவருபவரை) காணமுடியாதவனானான். (இந்நிலையில்) ஒருத்தி- (எதிரேவந்த) ஒரு பெண், முலைமுகடு-அவளது முலையின் உச்சி, அழுந்தற - (நளன் மார்பில்) நன்றாக அழுந்தும்படி, முட்டினாள் - முட்டிக்கொண்டாள்.

விரிவுரை:—காதலால் தன்னையேதுறந்த வள்ளலை அவன் காதற்குரியாளையும் துறக்குமாறு தூதுபோக்கும் கவிவரர், தூதுவன் மனங் களைக்கவும் படிப்பவர் மனங் களிக்கவும் குறும்புசில புரிகின்றார். அமரர்கோனுதவிய மந்திரத்தால் ஒருவர் கண்ணிற்கும் நளன்புலனாகானதலால் வாவிதோய்ந் தாடுவாரும், கரைதனில் பயில்வாரும் அப்பொழிலினூடே எழில்நளன் படராவதைக் கண்டாரலர். எனவே மங்கையர், தம் அல்குல்தடம் தெரியுமாறு வாவிநீர் புரிந்த அச்சதியையும் கவனியாமலுவகையின் ஆடினர். எல்லாக்கலைகளினும் தேர்ச்சிமிகப்பெற்றுள நளனது தூயமனம்இக்காட்சியைக்காணக்கூசிற்று. உடனேகண்களைமூடிக்கொண்டு தன்னெறி படரலானான். ஆயினு மிம்மன்னவன் மதிவகுத்த சூழ்ச்சி பயன்படவில்லை. அல்குலைப் பார்க்கலாகாதென்று மூடிய கண்கள் மங்கையொருத்தியின் முலைமுகடு அவன் மேல் அழுந்தும்படி செய்தன.

காமுறு மொருத்திதன் வதனங் கண்டகண்
கோமகன் முகிழ்த்தலாற் கோதை மார்முக
மாமதி யென்பது மன்னன் செய்யகண்
டாமரை யென்பதுந் தக்க வாயவே. 35

(உரை). காமுறு - விருப்பம் தருவதற்குரிய அழகையுடைய, ஒருத்திதன்-ஒருபெண்ணினுடைய, வதனம் - முகத்தை, கண்ட-பார்த்த, கண்- தன்னுடைய கண்களை, கோமகன்-நளசக்ரவர்த்தி, முகிழ்த்தலால்-மூடிக்கொண்டதால், கோதைமார் முகம் -மாதர்களுடைய முகத்தை, மா மதி என்பதும்- பூரணசந்திரன் என்பதும், மன்னன் - நளனுடைய, செய்ய - சிவந்த, கண் - கண்களை, தாமரை என்பதும்- தாமரை என்று சொல்வதும், தக்க - தகுதியுடையன, ஆயவே - ஆய்விட்டனவே.

விரிவுரை:—மூடியகண் இப்படி வஞ்சிக்கவே,கண்ணைத்திறந்து செல்வதேநேரிதென்று கருதினவனாகிய நளன்மேல்நடக்கலானான். அங்குமெழிலுடைநங்கையொருத்தியெதிர்வந்தாள்.தான் வரைந்துகொள்ளாத மாதரனைவரும் உடன்பிறந்தார் என்றுநினைக்கும் சிந்தையனாகிய நளன் அவளைப் பார்ப்பதுந் தவறெனக்கொண்டு மீண்டும் கண்களை மூடிக்கொண்டான். இந்நிகழ்ச்சியை ஒரு நிபமாகக்கொண்டு கவிவரர் கற்பனையொன்று தன்மனத்தொடு பிறர்மனமும் உவகையால் ஊக்கப்பெறுமாறு அமைக்கின்றார். மாதரார் முகத்தைச் சந்திரனென்றும் மன்னவன் கண்ணைத்தாமரை என்றும் எல்லோரும் சொல்வதின் உண்மையை ஈண்டுக் கண்டேன். சந்திரனைக்கண்டதும் தாமரை மூடிக்கொள்வதுபோல்,அந்நங்கையைக் கண்டதும், அவன் கண்களும்மூடிக்கொண்டன. எனவேநளன்தாமரைக் கண்ணன் என்பதும், மங்கையர் மதிமுகத்தார் என்பதும் தகுதியே ஆயின;" என்று தேர்கின்றார் கவி.

குறிப்பு:—சந்திரன் தோன்றியதும் தாமரை முகிழ்ப்பது இயற்கை. இப்பொழுது மன்னவன் கண்கள், எதிர்ப்பட்ட நங்கையின் முகத்தைக் கண்டளவில் மூடிக்கொண்டன. எனவே அவள்முகத்தைச் சந்திரனென்பதும் இவன் கண்களைத் தாமரையென்பதும் தகுதியே என்பது ஐயமிலாவகை நிச்சயமாயின. ஆதலால் இது தகுதியணி எனப்படும். இவ்வணியின் இலக்கணம் 7வது வால்யூம்.34வதுஇதழில் 532வது பக்கத்தில் விரிவாகக் கூறப்பட்டுளது.

செய்யகண் முகிழ்த்திடல் விழித்த தீதெனா
வையனுங் கடைக்கணா னோக்க வன்பிதென்
றெய்யும்வேள் கணைமல ரிதய மோர்ந்துமால்
பொய்யென வருச்சனை புரிதல் போன்றதே. 36

(உரை). செய்ய - சிவந்த, கண் - கண்களை, முகிழ்த்திடல் - மூடிக்கொள்ளுதலும், விழித்தல் - விழித்துக்கொண்டு செல்லுதலும், தீது எனா - தீமையாகவிருக்கின்றது என்று நினைத்தனனாய், ஐயனும் - நளமகாராஜனும், கடைக்கணால் நோக்க - கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு செல்லவும், அன்பு இது என்று- காமவிருப்பினால் இது நிகழ்வது என்று கொண்டு, வேள் - மன்மதன், எய்யும் - விடுத்த, மலர்க்கணை - புஷ்ப்ப பாணமானது, இதயம் ஓர்ந்து - மன்னனது மனத்தூய்மையைத் தெரிந்துகொண்டு, மால்-(கடைக்கண்நோக்கம்)காமமயக்கம் என்பது,பொய்என - பொய்யென்று கண்டு, அருச்சனை - பூசை, புரிதல் போன்றது - செய்வதுபோலாயிற்று.

விரிவுரை:—கண்ணை மூடினாலும் திறந்தாலும் தீதாக முடிவதால் நளன் தான் போகும்நெறி தெரியுமளவு கடைக்கண் திறந்து பார்த்துக்கொண்டு போனான். கடைக்கண் பார்வை காமத்தின் குறியாதலால் இம்மாதர்பால் மையலே கொண்டானிந்நளன் எனப் பிறழ்ந்தெண்ணிய மன்மதன் மலர்வாளிகளைத் தூவத் தலைப்பட்டான். அவன்விடுத்த அம்மலர்க்கணைகளோ, "இடந்தெரியாது ஏவினனே. விருப்புச்சிறிது உற்றார்பால் விடுத்தால் அன்றோ பயனுண்டு. இப்பெருந்தகையின்மனமோ தூயது. எனவே இவனை வழிபடுவது அல்லாமல் வேறொன்றும் செய்வதற்கில்லை" என்று அவனுக்கு அருச்சனை செய்தனவாம்.

தெரிவையென் றுருவெளி யோடு செப்பிய
வரசன துரைய சரீரி யாமென
வெருவிய மாதர்சொற் கேட்டு வெள்குறா
வுருவெளி யிதுவென வுள்ளந் தேறினான். 37

(உரை). தெரிவை என்று - தமயந்தி என்று, உருவெளியோடு - உருவெளித் தோற்றத்தோடு, செப்பிய- சொல்லிய, அரசனது உரை - நளனுடைய சொல்லை, அசரீரி ஆம் என - இது ஆகாயவாணியின் சொல் என்று நினைத்து, வெருவிய- அச்சமுற்ற,மாதர்சொல் கேட்டு-மாதர்சொல்லைக் கேட்டு, (நளன்) வெள்குறா- வெட்கமடைந்து, (பின்) இது உருவெளி என்று- தான்கண்ட தமயந்தி உருவெளித் தோற்றமென்று தெளிந்து, உள்ளம் தேறினான்-மனந்தேர்ந்தான்.

விரிவுரை:—தமயந்தியினைநினைவொன்றே நிலைத்த மனத்தவனாயிருக்கின்றான் நளன். உள்ளத்தே ஊன்றித் துளங்குமெண்ணம் ஓர் உருப்பெற்றுப் புறத்தே தோன்றுவது இயற்கை. தமயந்தியின் உருவம் இப்பொழுது அவனுடைய உள்ளத்தைவிட்டு வெளியே வந்து அவன்கண்முன்னர் ஆடுகின்றது. இதுபொய்த் தோற்றம் என்றுணராமல் அவ்வுருவெளியுடன்பேசுகின்றான். தன்னுருவம் மறைத்திருக்கின்ற நளனது பேச்சொலியை மாத்திரம் அயலிருந்த மாதர் கேட்டு, 'இது அசரீரியோ' என்ன அஞ்சித் தம்முள்ளே பேசிக்கொள்கின்றனர். இவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டபிறகே, தான்உருவெளியைத்தமயந்தியென்று மயங்கிய பொய்ம்மையை உணர்ந்து நளன் வெட்கப்படுகின்றான்.

உருவெளித்தோற்றத்தின் இலக்கணம்முன்(5வது-வால்யூம், 404வது பக்கத்தில்) கூறப்பட்டிருக்கின்றது.

கலாநிலடம் முன்னைய வால்யூம்கள்

1928, 1930, 1931, 1932, 1933 வருடத்திய வால்யூம்கள் எம்மிடம் கிடைக்கும். ஆயினும் இன்னும் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் உடனே பெற்றுக்கொள்வது நலம்.

ஒவ்வொரு வால்யூமின் விலை—பைண்ட் செய்யாதது. ரூ. 7-8-0. ஆப்லெதர்-கில்ட் பைண்ட் செய்தது ரூ. 9-0-0. தபால் அல்லது ரயில் பார்ஸல் கட்டணம் வேறு.

சூளாமணி

[536-வது பக்கத்தொடர்ச்சி]

குமார காலச் சருக்கம்

தோலாமொழித்தேவர் அரசனுடைய நாளோலக்கக் கூடம் முதலியவற்றை அட்டவணைப்படுத்தி நகரப்படலத்திலேயே மனமுறியும்படி நெடுகப் புனைந்துரைத்து முடிக்காது, ஆங்காங்கே இடம் நேரும்போதெல்லாம் அவ்வவ் விடத்திற் கேற்றவாறு இனிதே புனைந்துரைத்து, இந்நூலை ஓதுவாருக்கு இன்பமூட்டுகிறார். திருவோலக்கத் திருக்கூடம் தோலாமொழித் தேவருக்குஎவ்வாறு தோன்றுகின்றது? நேரேஎதிரில் மேடைகள்விளங்குகின்றன.அவையனைத்தும், பளிங்கினை ஒளி பெருகும் வகையில் பலகைகளாகப் பிளந்து,உள்ளிடமெல்லாம் ஒளியோடுநன் குவிளங்க, அவற்றைச் சேர்த்து, ஓரத்தில் எல்லாம் பளபள என மின்னும் செம்பொன் கொண்டு புனைந்துள்ளவையேயாம். மேலே வெள்ளி ஓடுகள் வேய்ந்துள்ளார்கள். இதனைத் தாங்கி நிற்பன விட்டுவிட்டு ஒளிரும் பவளத்தினால் ஆகிய திண்ணிய தூண்களேயாகும். தரையோ, சுடர் விடுகின்ற பலவகைத் திருமணிகளும் ஒருங்குதவழ மிளிர்கிறது. கல்லும் மண்ணுமாய்க்கிடந்த இம்மணிகளும் பொன்களுமாம் செல்வம், அழகென்பதோர் திருவுருவம் பெற்றாற்போன்றொளிர்கின்றது, அந்தக் கூடம். அத்தகைய அழகிய கூடமும் இவன் வருமுன் பொலிவிழந்து நிற்கின்றது. இவன் வந்ததும் குறைவறநிறைவுபெற்றுப்பொலிகின்றது. ஈண்டும்திருவோலக்கச் சிறப்பால் இவன் பொலிகின்றான் என்ற எண்ணம் வாராதபடி இவனாலேயே அதுபொலிகின்றதென வற்புறுத்திக் கூறுதல் காண்க.

அத்திருவோலக்கத்தே செஞ்சுடர் வீசும் பொன்னாலாகிய மடங்கலணையொன்றுளது. அவ்வணையின் மேலேறுவதற்கு ஆளிவடிவான மிதிபடி யொன்றும் விளங்குகின்றது. அதனுடைய முகம் மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளது. அது தன் துதிக்கையினால் யானைக்குட்டி ஒன்றைக் கவ்விக்கொண்டு நிற்கின்றது. அழகிய கொம்புகள் குளிர்ந்த பிறையேபோலச் சுடர் விடுகின்றன. இம் மறவடிவத்தின்மீது தன் கால்களை வைக்கின்றான் பயாபதி. அப்போது அந்த ஆளியின் முகம் அழகுபட மலர்ந்து தோன்றுகின்றது. குட்டி யானையைக் கொன்று நின்ற அக் கொடுந்தோற்றம், அதன்மீது அரசன்கால்களைவைத்ததும்,ஆளியினழிவாய் மாறித் தோன்றுவது, கண்டோர்க்கு முன்னையதினும் மனங்கவர் காட்சியாதலின், ஒளிமலரத் தோன்றுவதாகின்றதெனலாம். அல்லது திருவடி பட்டமட்டிலேயே, அவ்வாளியும் மனமகிழ்ந்து பகையை மறந்து முகமலர்கின்றதெனலாம். அவ்வாறதன்மீது ஊன்றி ஏறி, மடங்கலணைமீது வீற்றிருக்கின்றான். கதிரவனை யொத்த அரச ஒளியோடு செம்பொன்னாற் சிவந்த மடங்கலணைமேல் வீற்றிருக்குமவன்,விரும்பத்தக்க செவ்விய ஒளியோடு விளங்கும் கிழக்கெழு மலையின் முடியிலே, நாம்கண்ணாரக்காண விளங்கும் கதிரோன் விளங்குவதேபோலத் தோன்றுகின்றான். கதிரவனைக் கண்கொண்டு இன்பமுறக் காணும் நிலை அஃதேயன்றோ?

திருமறையின் பொலிவொடு மெல்லிய புரிநூல் உடைய ஐயரும், பொறிவண்டார்க்கும் பெரிய மலர்களைக்கொண்டு கட்டிய கண்ணிகளைச்சூடி விளங்கும் அமைச்சரும், பெரியதா யழிக்கும் ஆற்றல்கொண்டு விளங்கினும் காவற்றன்மை பூண்டு எல்லையில் நிற்கும் கடலேபோலப் பரந்து அறநெறியில்நின்று உலகைக் காக்கின்ற படையையுடைய அரசன் மனக்கருத்தறிந்து,அவன் தாமரைபோன்றதன் செங்கட்கடையால் காட்டும் இடங்களில் அமர்கின்றனர்.

இவர்கள் இன்னவாறு முன்னே இருந்தபின்னர், பெருங்கடலால் சூழப்பெற்ற உலகத்தைக் காக்கும் இவ்வரசனிடத்தே, அரசப் பண்புகள் எல்லாம் நிலையாக மன்னி நிற்பது கண்ட வெற்றிவேலேந்திய வேந்தர், வியப்பும் அன்பும் மீதூர, அவனெதிரே அகங்குழைபத்தம்மையும்மறந்து, அவன்கழலைவணங்குகின்றனர். அன்பினால் பிறரை இவ்வாறுவணக்கும் காலுக்கன்றோ கழலணிதல் வேண்டும். தம்மையும் மறந்து, அன்போடு, அவர் வணங்குகின்றமையால்,குறித்தஎல்லையில் நில்லாது, மணிகள் அழுத்தியமுடிகள்,அவனுடைய கழலில் உராயுமாறு வணங்குகின்றனர். இவ்வன்புவழிபாட்டினால் அக்கழல் முன்னினும் பொலிவதுகாண்கின்றார் தேவர்; திருமுடிகொண்டு தீட்டிப் பொலியச் செய்கின்றனர் அவ்வேந்தர்கள். அவர்கள் விழுந்து வணங்கும்போது அவர்கள் வெற்றி வேலைக் கீழே வீழ்த்தி மின்னிப்பொலியும் தோள்வளை முதலாம் அணிகள் முன்னினும் விளங்கக் கையை நீட்டி வணங்குகின்றனர். வணக்கநிலையி லன்றோ, பணியும் இடமறிந்து பணிந்த வேலும், வெற்றிபெறுகின்றது; அணிகளும் மின்னிப்பொலிகின்றன. பின் அவர் அரசன் அருளிச்செய்த இடங்களில் தங்கள் தங்கள் முறைப்படி வந்து சேர்கின்றனர்.

இவ்வரசன் அந்நிலையில் தோலாமொழித் தேவர்க்கு ஓடைமால் களிற்றின்மேல் நிற்பதாகக் காட்சி கொடுக்கின்றான். அரசன் செல்வத்தினைக் குறிப்பதோர் அடையாளமே அக்களிறானதினால், மடங்கலணைமேல் வீற்றிருப்பானையும் ஓடைமால் களிற்றினான் எனக் கூறத் தட்டில்லை. அரச செல்வமாகிய யானையின்மீது விளங்குகின்றான். அவ்வியானைக்குக் களிப்பேறினால் பிறர்க்குத் தீங்குவிளையாதபடி காக்கப் பரிக்கோற்காரரும் வளையூதிச்செல்வாரும் சுற்றிவரவேண்டாவோ? அவர்கள் அதனைக் குத்தி முடுக்கிக் களிப்பைத்தெளிவிக்கவும் செய்வார்களன்றோ? அங்ஙனமே இவ்வரசனும் யானையும் களிப்பின் மூழ்கி உலகைக் காலால் தேய்த் தரைக்குமேல், உலகைக் காக்கவும், அரசுக்கு இடித்து உரைத்து நன்னெறியில் ஈர்த்துச்செல்லவும், உடனிலைச்சுற்றமாம் உழையராய்அமர்கின்றார் யார்? பண்டைநாள் தொடங்கித் தன் மரபினர்க்கு இத்தகையதொண்டுசெய்து அன்பும்அறமும் பிறழாது வர

ழ்ந்த குடியில்பிறந்துதலைசிறந்தார், இவனுடைய திருவடிக்கண்ணே அவாவின்றி அன்புடைய பெரியோர், அறமுரைத்தல் உட்பட எல்லாத் தொழிலிலும் வெற்றியே பூண்டு நிகழ்வோர், காத்தலை தம்தொழிலாய், எழுவையே தோளாக வளர்த்து வைத்தாற்போலும் வலியுடையார், தன் குடியிற்பிறந்து தம்பியர் முறையில் நிற்கும் இளையவர்; இத்தகையாரையே அருகே வைத்து விளங்குகின்றான்.

காவலன் என்னும் செம்பொன்வடிவமான கற்பக மரம், அழகுபெற்றுப்பொலிகிறது. நகைமுகமெனும் பூவே பூத்துத் திகழ்கின்றது. அஃதறிந்து நாவலர் என்னும் வண்டுகள் தம்புலனெலாம் அவ்வுவகையில் மூழ்கிக்களிப்ப வந்து மொய்க்கின்றன. பாட்டோடே பரவும் பண்ணே, அவ்வண்டுகளின் இன்னிசை பாடிக்கொண்டே அப்பூவில்மொய்க்கின்றன அவ்வண்டுகள்.

இசையமைந்த மகரநல்யாழ்ப்பாடலை இவ்விசைப் புலவர்கள்பாடுகின்றார். காதுகொடுத்துக் கேட்போம். "அரசனே நின்புகழ் உலகம்முழுதும் பரந்தது. அகலநெடுகப் பரந்தபின் மேற்செல்ல இடமில்லாதபோது வளர்கிறது. விண்ணகம்விளங்குகிறது. அப்புகழ்க்கடலில் மூழ்கித் திங்களும் உப்பொடு கலந்த நீரேபோல் ஒன்றாகிப்போகின்றான். முன்னைய திங்களிலும் இப்போதைய திங்களும் மிக ஒளிர்தலின். புகழோடு ஒன்றுபட்டமையாலேயே இவ்வேற்றுமை உண்டாயது. இப்புகழ்த் திங்களெனும் வெண்குடை நீழலிலே, அனைத்தும், நின் புகழாம் அறத்திற்குள் அடங்க, நீ வீற்றிருந்து ஆளும்போது, இவ்விடமகன்ற உலகத்திற்கு என் குறைவு. இவ்வாறு அறவழியே உலகைக் காத்தலால் வெற்றிபெற்றுக் கழலணிந்த நின்னருள் எனும் திருவடி வாழ்வதாக" என்பதொரு பாடல்.

இராண்டாவது பாடலைக் கேட்போம். இதுவரை இவ்வரசனை அறவழியிலே கண்டு நாம் இன்புற்றோம். இப்பாடல், அஃதே தோலாமொழித்தேவாது கொள்கை, என்பதைச் சிறிதும் ஐயமின்றி விளக்குகின்றது. ஒருவனைப்புகழ்வார் அவன்கருத்துக்கிசையவன்றோ புகழ்வர். ஆகவே, இப்பாடலிற் கூறிவருவது அவ்வரசனுடைய குறிக்கோளாக விளங்கிற்று எனவும் கூறலாமன்றோ? புகழையும் வெற்றியையும் கூறுவது புலவர்களுக்குரிய மரபு. மேற்பாட்டில் புகழைக் கூறினார், இங்கே வெற்றி கூறுகின்றார். புகழைத் திங்கள் என்பது போல, வெற்றியைக் கதிரவன் எனப் புகழ்தலும் மரபேயாம். இவனுடைய குடியே வீட்டுலகத்துக் கதிரவனாக விளங்குகிறது. இவனுக்கு முன்னே, இவன் குடியிற் பிறந்த வாதுவலி என்பவன், முகிலையும் உடைத்து மேற் சென்றுள்ள பனிமலையிலே, பலநாள் தவம்கிடந்தபோது கொடிகள் மூடிக்கொண்டன. பின்னே வீட்டுலகம் எய்தினான். அப்பேற்றைக் கண்ட வானவர்கள் வணங்கினார்கள். 'அவன் வீட்டுலகக் கதிரவனாகின்றான்.' அவ்வாறு வீடுபேற்றிற் கென்றே நோன்பு நோற்கும் குடியிலே உலகையுங் கடந்த அவ்வெற்றி, மேன்மேலும் சிறக்கத் தோன்றுகிறான் இப்பயாபதி. அறவழிதவறின் தன்னையே கொல்வதென ஏந்தி நிற்பதாம், வெஞ்சுடரெஃகம், "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை யற்றே தவத்திற் குரு" என்றபடி, தவவடிவமாக விளங்குகின்றது. அவ்வொன்றினாலேயே, அரசெனும் இடத்தை அகலமாகச் செய்துநின்றான் இவ்வரசன். "அத்தகைய செஞ்சுடர் முடியினால், நின்செங்கோல் உன் குடிப்பெருமைக் கேற்ப நீ கருதியபடி நல்வழியில் சென்று சிறப்பதாக" என்றவாழ்த்து இரண்டாவது பாடல்.

இப்படிப் பலரும் ஏத்த, இனிதே அங்கே வீற்றிருக்கின்றான் அவ்வேந்தன். அவனுடைய பொன்னால் மிளிர்கின்ற வாயிற்காவலன் வருகின்றான். அவனே பெரியமறவன். பொன்னாலாகியகழலணிந்தவன். "கடுவலி யுடைமை நன்று; ஆயின் அதனைக் கடுமையாகப் பயன் படுத்தலே தீது" என்பதற்கிணங்க இத்தகைய மறவர்களை எல்லாம் அறவழியில் நிலைநிறுத்திய இப்பயாபதியன்றோசிறந்தவன். வந்துநின்றவாயிலோனைக் கண்டு "கல்லெனத் திரண்ட தோளுடை மறவ! ஏழுநாழிகைவரை யாவரே யாயினும் வரின், வரவிடுக. அதுவரை நின் காவலைவிட்டிரு" என்று கூறுகிறான். கல்லெனத்திரண்ட தோளார்க்குக் கரையிலா அன்பினைக் காட்டுவது இப்படியே போலும். "காட்சிக் கெளியன்" என்று திருவள்ளுவர் தம்மரசனைப் பற்றிக் கனாக் காண்கிறார். அக்கனவை மெய்ப்படுத்தத் தோலாமொழித்தேவர் இவ்வாறு ஓவியம் எழுதுகிறார்.

அப்போது, குறிகளைக்கொண்டு முக்காலத்தையும் கண்டுரைக்கும் அறிவனார் ஒருவர் அவ் வாயிற்காவலனிடம் வருகின்றார். உண்மையைக் கூறும் நூல்கள் என்றவற்றை அளவின்றிக்கற்று அவற்றின்கரையைக் கண்டவர்என, அவரைக்கண்டதும்தெரிகிறது. ஆனால் அக்கல்வியால் செருக்காது அடக்கத்தால் நிலைபேறு பெற்று விளங்குகிறார். சேய்மையிடத்தும் சேய்மைக் காலத்தும் நிகழ்வனவெல்லாவற்றையும் தம் அறிவாலேயே தம்மனத்தேகண்ணுற்கண்டாற்போலத்தெளிவாகக் காண்கிறார் என, அவர் முகமும்கண்ணுமேகாட்டுகின்றன. அவர் நீர்மை இருக்கின்றபடி அது. அவ்வறிவினார் வாயிற்காவலனை விளித்து, "இப்போது இடங்கிடைக்குமானால், வேந்தனைக் காண்பேனோ! நீ யற்றம்பார்த்துக் கூறுக" என்று மரபின்படி கூறுகின்றார்.

அவ்வாயிற்காவலனும் முன்னமே அரசனதுகட்டளையைப்பெற்றுளானாதலின் "நீர் வரப்போகிறீர் என்ற உமது குறிப்பறிந்துதான் போலும், அரசர் இங்கு வருவாரை உள்ளே விடச்சொல்லி இருக்கிறார். முன்னரே அருளப்பட்டீர். ஈதோ உள்ளே இப்போது புகுமின்" என்று வழிவிடுகிறான். அறிவினாரும் அரசனை அடைகின்றார். பெரும்படையுடைய அவ்வரசனும், தன் குடிப்பூவாகக் கையிலேந்தியுள்ள ஒரு வெண்தாமரை மலரால், உயர்ந்த ஓரிருக்கையை அவருக்குக் காட்டி "உவகையுடன் எழுந்தருள்க" என்கின்றான். ஓலக்கத்தில் அரசன் வீற்றிருக்கும்போது கண்டால், "இத்தகைய அரசனுக்கு உலகினர் அனைவரும்துணையாகிப் படையேந்தி இவனுடைய தானையுட் புகுவர்; மேன்மேலும் வளர்வதன்றோ இவன் தானை" என்று தோன்றுகிறது. அந்நிலையில் இருந்தும், வந்தோர்தம் மரபு அறிந்து வழிபடுகின்றான் அரசன். பூக்கொண்டு வணங்குவதேபோலப் பூப்பிடித்தகையால் வந்தவருக்கு உயர்நிலை யருளி இன்மொழியுங்கூறி வரவேற்கின்றான்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[541-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து, 10-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

உலக முண்ட பெருவாயா
வுலப்பில் கீர்த்தி யம்மானே
நிலவும் சுடர்சூ ழொளிமூர்த்தி
நெடியா யடியே னாருயிரே
திலக முலகுக் காய்நின்ற
திருவேங் கடத்தெம் பெருமானே
குலதொல் லடியே னுன்பாதங்
கூடு மாறு கூறாயே.

அவதாரிகை:-சென்ற தசகத்தில் விவரித்தபடி திருநாட்டிலுங்கூடக்கேட்கும்படி கூப்பிட்டழைத்துமவனைக் காணாமையாலே இனி அவனைக் காண்கைக்கு உபாயம் இவன் திருவடிகளைப் போக்கி மற்றொன்றுமில்லையென்று பார்த்து இவனுடைய காருணியவாத்ஸல்யாதி குணங்களைப் பற்றாசாகச் சொல்லிக்கொண்டு பிராட்டி, புருஷாகாரமாக ஸர்வலோக சரணியனை திருவேங்கடமுடையான் திருவடிகளைச்சரணம் புகுகிறார். (புருஷாகாரம்-காரியம் பயன்பெறச்செய்கிற துணைநிற்போன்) ஆறாயிரப்படி.

சரணம்புகுகையாவது:—முன் 9-ம்தசகம்பத்தாம் பாசுரத்தில் வைணவ முறைப்படி ஆழ்வார் பிரபந்நஜநத்தலைவரென்று அறுதியிட்டோம். பிரபந்நம் என்றால் அடைகை; அதாவது: எம்பெருமானின் திருவடிகளையே சரணஸாதகமாகப்பற்றி அவனை அடைதல். சுருக்கமாய், அதின் ஸ்வரூபத்தை இங்கு வரைதல் அவசியமாகையால்எழுதுகிறோம். மோக்ஷமடைய32 உபாயங்கள்வேதங்கள்கற்பித்து விதித்திருக்கின்றன. அங்கு இவைகளுக்குப் பெயர் (1) உபாஸநம், முயற்சிசெய்து தபசுஇயற்றல் (2) வேதநம், நன்றாகவறிதல் (3) உபாயம்-அடையும் வழி (4) வித்தைகள் - சாஸ்திரத்தில் கூறிய அறியும்வழிகள் என்று பெயரிட்டிருக்கிறார்கள். உதாரணமாக (a) தஹரவித்தை-ஹிருதய நடையை ஒழுங்குபடுத்தும் அதிசூக்ஷ்ம தசைகளில் எம்பெருமான் ஸாந்நித்தியம்செய்கின்றானென்று தியானித்து அவனைச் சிந்தனைசெய்தல் (b) அட்சிவித்தை- அதாவது இமையின் நடுவில் அவன் அமைந்திருப்பதாகத் தியானம்செய்தல் (c)அந்தராதித்திய வித்தை - சூரியன் நடுவில் தேஜோமயமாய் நிற்பவனாகத் தியானித்தல். (d)மதுவித்தை. இதுவேபோல் மொத்தம் 32. இதில் 32-வது வித்தை "சரணம் புகுதலை"ப் பற்றியாம் "நியாஸம்-பரந்நியாஸம்" (சுமையைக்காப்பாற்றுகிறவனிடத்தில் வைத்தல்அல்லது தியாகம் - விட்டுவிடுதல்). நம் மாத்மாவை ரக்ஷிக்கவேண்டிய நம் சுமதலையை வேறொருவர் கையில் விட்டு ஒழிந்து சுகமாயிருத்தல், தைத்தரிய உபநிஷத்திலும் கடவல்லி உபநிஷத்திலும் நிஷ்கரிக்கப் பட்டிருக்கிறது.

அந்தந்த வித்தைக்குள்ள ஆஸநம் அங்கநியாஸம் மந்திரம்முதலானதுகள் வேறு. எல்லாவித்தைகளும் கீதையில் பகவானால் உபதேசிக்கப்பட்ட பக்தியோகத்தின்கவடுகள். பக்தியினாலன்றி அவனை அறியவொண்ணாதென்று அவன் அறுதியிட்டிருப்பதால் பக்தியோகத்தைத்துடங்கவும்நடைபெற யத்நிக்கவும் அந்தந்த வித்தையை உபாஸிக்கிறவர்களிடத்தில் உருசியுள்ளவர்கள் சீடர்களாய்ப்புகுந்து ஒவ்வோர் வித்தையை யநுஸரித்துவந்ததாகக் கொள்ளவேண்டியது. வியாஸ பகவான் பிரம்ம ஸூத்திரத்தில் சிற்சில வித்தைகளைப்பற்றி விசாரித்துத் தீர்மானம் சொல்லுவதால்அக்காலத்தி லவைகளினிலக்கணங்கள் சந்தேகப்பட்டு வாதங்கள் வந்ததாக ஏற்படுகிறது - அந்தக்காலத்திற்குப் பின்னாலித்தேசத்தில் பௌத்தமதத்தை இராஜாக்களும் மஹாஜநங்களும் புதியன புகுதலில் ஒரு சார்பாய் ஆதரித்துவந்தமைபற்றி வேதவித்தைகள் ஒருவாறு மலினமடைந்து பௌத்தமத கிளர்ச்சி நின்றபின், நின்றேபோய்விட்டதாகத்தெரிகிறது- நியாஸம் என்கின்ற வித்தை மாத்திரம் அநுட்டானத்தில் நடந்து வந்ததால், ஆழ்வார் கைப்பற்றவே பிறகுள்ள வரும் அநுஷ்டித்தார்கள். இவ்வண்ணம் இந்தக்கேடு இவ்வித்தைகளைச் சூழ்ந்ததின் காரணம் "பகவான் கீதாசாரியன் "பஹூநாம் ஜந்மநா மந்தே ஞானவான் மாம் பிரபத்தியதே" (அதாவது, வெகு ஜந்மங்களில் தவமியற்றித் தேறியபிறகு தவம்முற்றிச் சித்தசுத்தியுள்ளவர்கள் என்னிடத்தில்சரணமடைகின்றார், அதாவது பக்தியோகத்தின் ஸித்தியை யடைகிறார்கள்)என்று அறுதியிட்டதேயாம். இதிலிருந்து, ஸாமான்னியர்கள்பக்தியோகப்பயனடைவ தரிதென்றும் அவனையடைவதென்றபொருள் வெகு சம்சயமென்றும் ஊஹித்து முயற்சிசெய்வதில் ஊக்கந் தளர்ந்துஇத்தவப்பயனை நாடாதவராய் ஒழிந்துவிட்டார்கள். எக்காரணத்தினாலேயோ "நியாஸம்" "பிரபத்தி"வித்தை ஒன்றையொழிய மற்றைய மோட்ச ஸாதனங்கள் மறைந்துபோயின. இத்தசகத்தின் பத்தாவது பாசுரத்திற்கடியில் இதன் ஸ்வரூபம் அநுட்டாநம் முதலிய இயம்பக்கிடப்பதை அங்கே எடுத்து எழுதுவோம். ஆனாலும் இவ்விடத்தில் "இனி அவனைக் காண்கைக்கு உபாயம் இவன்திருவடிகளைப் போக்கி மற்றொன்றுமில்லையென்று பார்த்து" என்று அவதாரிகையிலுள்ளதை விளக்குவது அவசியம்.

இவ்வுலகில் ஸஞ்சரிக்கும் ஸர்வ ஜீவாத்மாக்களும் பிருகிருதியாலமைந்த தேஹங்களில் உலாவித் திரியும் காரணம் அநாதியாக அவர்களின் பூர்வஜன்ம கர்மபயனாக ஈசுவரனிட்ட ஆணை. இந்தத்தேஹாவஸ்தையினின்றும் விடுபட வேணுமானால் பகவானின் அருளாலே யாகவேண்டும். பகவானே கீதையில் (7-14)முக்குணங்களாலமையப் பெற்ற பிருகிருதியைத் தாண்டவேண்டுமானால் அவனைச் சரணம்பற்றியே விடுவித்துக் கொள்ளவேண்டுமென்று பணித்தான். இதையேதான் ஆழ்வாரும் (3-2-3)ல் "பொல்லாவாக்கையின் புணர்வினை யறுக்கலறாச் சொல்லாய் யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சி" என்று தே[illegible]

இதுவரையில் அநேக ஜந்மங்களெடுத்தும் அவைகளில் உன்னை யடைய "கிற்பன்" விதிக்கப்பட்ட உபாயங்களிலொன்றைச்செய்தல் "கில்லேன்" அநுஷ்டிக்கவில்லை யென்றேங்கி மேல் (8)ம் பாசுரத்தில் "மேவுந் துன்பவினைகளை விடுத்து மிலேன்" "ஓவுதலின்றி இடைவீடில்லாது உன்கழல் வணங்கிற்றிலேன்" அதாவது தான் செய்யக் கடவதாய் நின்ற தபசாகிய யத்நத்தைச்செய்து "கலைப்பல் ஞானத்தென் கண்ணனை" அதாவது 32 (கலை) வித்தைகளாகவகுத்துள்ள மார்க்கங்களால் அடையக்கூடிய கிருஷ்ணபகவானை யடைய வேண்டுமானால் "உயிரின்மேல்" கவர்ந்து கொண்டிருக்கும் "ஊனிடை யாக்கை" மாம்ச நடுவிலமைந்த தேஹத்தை மேல் செப்பிய உபாயமொன்றால் ஒழிவித்துக்கொள்ள வேண்டுமென்று 11-ம்பாசுரத்தில் அறுதியிட்டு முடிக்கிறார். இதற்கு மேலும் தாம் இந்தத் தசகத்தினிறுதியி லநுஷ்டிக்கிற ந்யாஸ உபாயத்தி னேற்றத்தைப் பற்றிச் "சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்" என்று தம் அஸாதாரண கொள்கையைப் பிறர்க்கு உபதேசிக்கிறார். திருவாய்மொழியின் 1-ம் பத்து இரண்டாம் தசகம் "விடுமின் முற்றவும்" என்பது ந்யாஸவித்தையே இலக்குவைத்துப் பேசிற்றென்று விஸ்தார உரைகாரரான வடக்குத் திருவீதிப்பிள்ளைமுன்னுள்ளோர்ஐதீகமாகக் கொண்டார்களென்று குறித்திருப்பது ஞாபகத்துக்கு வரத்தக்கது. இப்போழ்து பிரகிருதத்திலும் சென்ற தசகத்திலுள்ள எட்டாம் பாசுரத்தில் ஆழ்வார் "உலகில் திரியும் (வவிக்கும்) ந்யாயத்தால்", அதாவது-ஜந்மமெடுத்துக் காண களேபரங்களை உதவப்பெற்ற பகுத்தறிவுகூடிய மானிட ஜந்மத்திற்குச் "செயக்கடவதாகிய ஸ்வாதந்தரியம் தம்முடைய தலையிலே கிடந்த" வென்றும், மோக்ஷமடையும் பேறு "உம்மதான பின்பு நீரும் சிறிது யத்நம் பண்ணவேணும்காண்" என்று எம்பெருமான் திருவுள்ளப்பட்டு மோக்ஷமருளவில்லை என்றும் நினைத்து (1)"ஸாதனமும் ஸாதகரும் உம்மாதீனமான பின்பு எனக்கு ஸ்வரூபமாய் நீர் உபாயத்தை அந்வயிக்கப் பார்க்கலாகாதென்றும் (2) ஸர்வமும் நீர் நிர்வஹிக்கவிருக்க நான் என்ன காரியம் செய்துகொள்ளல் வேண்டுமென்ற நியமமும் ஒவ்வாதென்றும் பாடியிருக்கிறார்—"ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்." பிரபத்தியின் உத்கிருஷ்டத்தையும் "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் கடவனாகிக் காலந்தோறும் எண்திசையிலும் பூப்பறித்து ஏற்றகில்லேன்" என்றும், பக்தியோக வேறுகவடுகளான மற்ற உபாஸனங்களில் தனக்கு உருசியில்லையென்று மல்லவோ இவர் பாசுரங்கள்.

'அவதாரிகையில் "இவனைக்காண்கைக்கு" என்று கூறுவது திருவேங்கிடமுடையான் திவ்யமங்கள விக்கிரஹத்தை மானுஷக் கண்ணால் பார்க்கவன்று ஆழ்வார் பிரார்த்திப்பது. "தம்முடைய பிருகிருதி ஸம்பந்தமெல்லாம்போய்த்தாம் வைகுண்டத்தில் அப்பிராகிருதமான தேஜோமய அழிவற்ற திவ்விய சரீரராய்த் திருவேங்கடம்வந்து எம்பெருமானை மற்ற அமரர்கள்போல் பரிபூர்ணமாக அநுபவிக்கவேண்டுமென்ற திருவுள்ளம்.

விசேஷக் குறிப்பு:—திருவேங்கடமுடையான் திருவடிகளை இந்தத் தசகத்தில் பிருகிருத தேஹத்தோடு அடைந்து கைங்கரியங்கள் செய்ய வேண்டுவதன்று. இவரின் இந்தத் தசகத்தின் பிரார்த்தனை வேங்கடத்தெம்பெருமான் திருவடிகளை இங்கே ஆழ்வார் கோருவது தாம் உத்தேசிக்கும் சேர்விடமாகவல்ல. அந்த இடம்சேர உபாயமாகப் பற்றுகிறார். அவ்விடம் வைகுண்டமே. பின்னர் அங்குச் சென்றாலும் சிற்சில காலங்களில் இமையவர் உறவுகூட்டுடன் திருவேங்கடத்தில் உவந்து கைங்கரியம் செய்வோமென்று உத்தேசித்து இத்தசகத்தில் 6-ம் பாசுரத்தில் பாடுகிறார். சென்ற தசகத்தில் திருநாட்டுக்குத் தம்மைக் கூவிக்கொள்ள வேண்டுமென்றும், "வாரா யொருநாள்" என்றும் எம்பெருமானின் "தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ள வேண்டுமென்றும்" பிரார்த்தித்த ஆழ்வார் வைகுண்டத்து எம்பெருமானை யபேக்ஷிக்காமல் திருவேங்கடத்தானை வேண்டிக்கொள்வானேனென்றால் அவ்விருவரும் ஒன்றல்லவோ! உம்பர் அமரரங்கும் (வைகுண்டத்திலும்) இங்கும் (திருமலையிலும்) இரண்டிடத்திலும் தொண்டு புரிகின்றார்கள். ஆகையால் வேங்கடத்தான் அர்ச்சாரூபியா யிருக்கை பற்றிப் பூர்ணகலைக்கு உரியவர் அல்லரென்று எண்ணப்போகாது. ஆகையால்தான் இவன் ஸந்நதியில் அவனை உபாயமாகப்பற்றிச் சரணம் புகுகிறார்.

பதக் குறிப்புக்கள்:—உலப்புஇல்-அளவு இல்லாத, கீர்த்தி, வாத்ஸல்யம், ஸௌசீல்யம், இரப்பார்க்குத் தாழ்தல், ஸௌலப்யம், ஸர்வஞத்துவம், ஸர்வசக்தித்துவம் பரமகாருணிகத்துவம், பரமோதாரத்துவம் முதலிய அனேக கல்யாண குணங்களால் பிரவஹித்திகிலவும் சுடர்சூழ் ஒளி மூர்த்தி, நிலவும் - வளரும் இங்கு நித்தியமாயிருக்கிற, சுடர்-தேசுபோலே, சூழ் - சூழ்ந்த, ஒளி மூர்த்தி-சுத்த ஸத்துவ பிரகாச திவ்விய விக்கிரகமுடையவன்; திருவேங்கடம் - உலகுக்கெல்லாம் திலகம்போல் இருக்கிறதென்று திருவுள்ளம் - பிரகாசத்தால் விசேஷ அணிபோலிருப்பதாகத் தாத்பரியம்-குலத்தொல் அடியேன்-குலத்தினால் பரம்பரையாய்த்தாசபூதரானவரின் சந்ததியிலுதித்தவன்.

பொழிப்புரை:—"காருணிய வாத்ஸல்யாதி அதிசய அஸங்கியேய கல்யாண குணனாகையாலும் சுயதேஜஸால் அகிலலோகங்களையும் விளங்கவைக்கும் திவ்யரூபத்தையுடைய எனக்குத் தாரகனாகையாலும் பரமபதத்தில் ஸதாவீற்றிருக்கும்இருப்பு உலகருக்குக்காண்கைக்குக்காணவொட்டாததும் எட்டவிட்டாததுமான இடமன்றிக்கே சுலபமாயடையத் திருமலையிலே புகுந்து நின்றருளுகையாலும் நான் உனக்குக் குடியடிமையாகையாலும் உன் திருவடிகளிலே என்னைச் சேர்த்தருள வேணுமென்கிறார்"-ஆறாயிரப்படி.

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[540-வது பக்கத் தொடர்ச்சி]

நின்னையே கெடுக்க நிகழ்த்தினை யிதுவே.

மும்மைசா லுலகுக்கெல்லாம் ஓர் மூலமந்திரமாகிய இராமன் என்னும் அப்பெயரினைப் புனிதமாக்கிய எம்பெருமான் நீலக் கார்முகில் கமலம்பூத்து மண்ணுற்று வரிவில்லேந்தி வருவதேபோல் வாலியின் கலங்கிய கண்களின்முன் நிற்கின்றான். அன்னவனை நோக்கி, "எண்ணுற்றாயென்செய்தாய் என்றேசுவான் வாலி இயம்பலுற்றான்" எனக் கம்பர் பாயிரங் கூறி வாலியின் கூற்றாக இனிச் சில பாசுரங்கள் பாடுகின்றார். அவைகளை ஆய்வதன் முன், வான்மீகி முனிவர் வாலியின் வாசகமாக அமைத்திருப்பவைகளை நினைவிற் கொள்ளல் அவசியமாகின்றது.—

"இராமரையும் மகா பலம்பொருந்திய லக்ஷ்மணரையும் கண்டமாத்திரத்தில் வாலி வணக்கமாயும் தைரியமாயும் அறந்தழுவிய சில வார்த்தைகளைப் பேசுவானாயினான:— "நீவிர் இராஜகுமாரர்; பிரதாபமுடையவர்; கண்ணுக்கு இனியவர்; நல்ல குலத்தி லுதித்தவர்; பலாட்டியர்; காந்தியுடையவர்; விரதம் பூண்டுள்ளவர்; அப்படியிருந்தும் பராமுகனாயிருந்த என்னை எய்து நீர் யாதுபயன் அடைந்தீர்? நான் வேறொருவனுடன் போர் புரிகையில் என்மேல் நீர் பாணம் ஏன் விடுத்தீர்? இவ்வுலகி லனைவரும் உம்மைக் கருணைக்கடலென்றும் குடிகளுடைய நன்மையில் நாட்டமுள்ளவரென்றும் ஐம்புலன்களையு மவித்தவரென்றும் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். தமம், சமம், க்ஷமை, தருமம், தைரியம்சத்தியம், பராக்கிரமம், அபராதம்செய்தவர்களைத் தண்டித்தல் ஆகிய அவையெல்லாம் அரசர்க்குரியகுணங்கள். நீர் இந்தக் குணங்களையுடையவரென்றும் உயர்குலத்துதித்தவரென்று மெண்ணித் தாரையானவள் என்னைத் தடைசெய்யவும் நான்சுக்கிரீவனோடு அமர்செய்ய வந்தேன். நான் உம்மைக் காண்பதற்கு முன், 'வேறொருவனுடன் நான் போர் புரியும்போது இராமர் என்னை எதிர்க்கமாட்டார்' என்று எண்ணினேன். நீர் தருமத்தை நிலைநிறுத்துவதாக வீண் கொடிகட்டிக்கொண்டு அதற்கு மாறாகவே நடந்து பாவத்தொழில்களைச் செய்கிறவரென்றும், புற்களால் மூடப்பட்ட ஒரு பாழ்ங் கிணறுபோல்பவரென்றும், ஆன்மாவை யழித்துக்கொண்டவரேயென்றும், பரிசுத்த வேடம்பூண்டு தீச்செயல் புரிபவரென்றும், சாம்பல்மூடிய நெருப்புப்போலத் தருமப்போர்வையைப் போர்த்துத் திரியும் கொடியவர் என்றும் இந்நாள்காறும் நான் அறிந்திலேன். உம்முடைய நாட்டிலாவது நகரத்திலாவது நான் ஒரு தீங்கு மிழைத்திலேன்; உம்மை நான் அவமதித்துமறியேன். காட்டில்அலைந்து கந்தமூலாதிகளை யுண்டு திரியும் குரங்காகிய நான் வேறே ஒருவனோடு சண்டைசெய்யும் பொழுது நீர் என்னைக் கொல்லவந்தது யாது காரணம் பற்றி? உம்மைப் பார்த்தால் இராஜகுமாரராகவும் கண்டோரால் விரும்பப்படும் தண்மை நோக்கமுடையவராகவும் விரதம் பூண்டவராகவும் காணப்படுகின்றீர். அரசர் குலத்தி லுதித்து வேதசாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தவவேஷம் பூண்டவன் யாவன் இக்கொடியகாரியம் செய்யத் தலைப்படுவான்? நீர் இரகுவம்சத்தில் பிறந்தவரென்றும் தருமவான் என்றும் பிரசித்தி யடைந்துள்ளீர். [illegible]மையுடைய நீர் ஏன் நல்ல இந்த உருவங்கொண்டு திரிகின்றீர்? சாமம், தானம், பொறுமை, தருமம், சத்தியம், உறுதி, பராக்கிரமம், அபராதஞ் செய்தவர்களைத் தண்[illegible] இவைகள் அரசர்தம் குணங்கள். நாங்களோ காய்களையும் கனிகளையும் புசித்துக் காட்டினில் சஞ்சரிக்கும் விலங்குகள். இது எங்களுடைய சுபாவம். அரச, நீர் மானுடன் இவ்வுலகத்தில் கலகத்துக்குக் காரணம், பூமி பொன் வெள்ளி முதலியவைகள். இவற்றில் எதன்மேல் ஆசைகொண்டு நீர் என்னை நலிந்தீர்? நாங்கள் தின்னும் கனிகளின்மேல் ஆசைகொண்டீரோ? நிக்கிரகம் அனுக்கிரகம் என்னும் இராஜ தருமங்களை அரசவிதிப் பிரகாரம் செய்வதே யல்லாது மனம்போனபடி செய்யலாமோ? நீர் கோப முள்ளவராகவும், உறுதியில்லாதவராகவும், காரணமின்றிப் பாணம்தொடுப்பவராகவும், இராஜ தருமத்தைச் செவ்வனே நடத்த அறியாதவராகவும் இருக்கிறீர். உமக்குத் தருமத்தில் விருப்பமில்லை; நற்காரியம் அறியீர்; அரசனாயிருந்தும் ஐம்புலன்களால் அலைக்கப்படுகிறீர். காகுத்த, யாதொரு குற்றமும் செய்திலாத என்னை நீர் அம்பெய்து கொன்றீர்; இத் தகாதகாரியத்தை ஏன் செய்தீர் என்று சாதுக்கள் கேட்டால் நீர் யாது சொல்லுவீர்? அரசனைக் கொன்றவன், பிரமஹத்திசெய்தவன், கோவதை செய்தவன், மற்றும் உயிர்ப்பிராணிகளைக் கொன்றவன், திருடன், நாஸ்திகன், தமையன் பிரமசாரியாயிருக்கத் தான் மணம்புரிந்துகொண்டவன், கோட்சொல்லும் குணமுள்ளவன், அற்பன், நண்பனைக் கொன்றவன், குருபத்தினி கமனம் செய்தவன் ஆகிய இன்னவர்கள் எல்லாரும் நரகம்புகுவார்கள். இதில் சிறிதும் சந்தேகமில்லை. என்னுடைய தோல் சாதுக்களால் தரிக்கத்தகாதது; எனது உரோமங்களும் எலும்புகளும் அவ்விதமாகவே நீக்கிவைக்கவே தக்கன. உம்மைப்போன்ற தருமவான்களால் என் மாமிசம் புசிக்கத்தக்கதுஅன்று. முள்ளம்பன்றி, பன்றி, உடும்பு, முயல் ஆமை ஆகிய ஐந்துநகங்களையுடைய இவ்வைந்து பிராணிகளையுமே பிராமணரும் க்ஷத்திரியரும் புசிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. என் தோலையும் எலும்பையும் புத்திமான்கள் தொடார்கள்; தசையையும் புசியார்கள். உம்மால் கொல்லப்பட்ட நான் ஐந்து விரலுள்ள குரங்கு. தாரை கூறிய நன்மைதரும் அவ்வுண்மைச் சொற்களைக் கேளாது நானின்று காலன்வாய்ப்பட்டேன். நல்லொழுக்கமுள்ள ஒரு பெண்ணுக்கு நலங்கெட்ட நாயகன் வாய்த்தாற்போல இப்பூமாதுக்கு நீர் நாயகனாகவாய்த்தீர். மகாத்துமாவாகிய தசரதருக்கு, சிறுமையும் கொடுமையும் பொய்மையுமுள்ளவரும் உயிர்களுக்குத் துன்பஞ் செய்பவரும் பாபியுமாகிய நீர் எவ்வாறு பிள்ளையாய்ப் பிறந்தீர்? நற்குணம் என்னும் கயிற்றை அறுத்து, தருமம் என்னும் அங்குசத்துக்கு அடங்காது, சாதுக்கள் செல்லும் வழியை நீங்கிச் செல்லும் இராமன் என்ற வேழத்தால் நான் இன்று கொல்லப்பட்டேன்? தீமை தருவதும், தகுதியற்றதும், சாதுக்களால் நிந்திக்கப்பட்டதுமான இக்காரியத்தைச் செய்துவிட்டுப் பெரியோர் சபையிற் சென்று நீர் யாது சொல்லுவீர்? அபகாரஞ்செய்தவரிடத்தில் நீர் ஒருபோதும் காட்டாத பராக்கிரமத்தை உமக்கோர் அபராதமும் செய்யாத என்னிடத்தில் காட்டினீர். என் முன் நின்று போர்செய்திருப்பீரேயாகில் நீர் இந்நேரம் என்னால்கொல்லப்பட்டு யமலோகம் போயிருப்பீர். போரில் புறங்காணமுடியாத என்னைக் குடித்துமயங்கித் தூங்குபவரைப் பாம்பு கடித்தாற்போல நீர் மறைந்து நின்று கொன்றீர். சுக்கிரீவனுக்கு நன்மை செய்யவேண்டுமென்றன்றோ நீர் இவ்வாறு செய்தீர்? நீர்விரும்பிய இக்காரியத்தை முன்னரே என்னிடத்தில் சொல்லியிருந்தீரானால் ஒரேபகலில் மைதிலியை நான் உம்மிடம் கொண்டுவந்து விட்டிருப்பேன்; அன்றியும்

இராவணனை வென்று அவனை உயிருடனே கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொணர்ந்திருப்பேனே. சமுத்திரத்திலிருந்தாலும் பாதலத்திலிருந்தாலும் வெள்ளைக்குதிரை ரூபமான வேதங்களை மகாவிஷ்ணு மீட்டுக்கொணர்ந்தது போல நான் மைதிலியைக் கொண்டுவந்திருப்பேனே. நான் சுவர்க்கலோகம் புகுந்ததற்பின் சுக்கிரீவன் அரசாள வேண்டியது நியாயமாயினும், போரில் இவ்வண்ணம் நீர் என்னை வஞ்சகமாகக் கொன்றது நியாயமன்று. இனிநான் என்னைப்பற்றி ஒன்றும் எண்ணவேண்டியதில்லை; என்றைக்காவது ஒரு நாள் மரிக்கவே வேண்டியதுதான். நீர் செய்த காரியத்துக்குத் தகுந்த சமாதானம் சொல்ல நீர் வழி தேடும்." இவ்வாறு மகாத்துமாவாகியவாலி சொல்லிவிட்டுப் பாணந்தைத்த பெரு வருத்தம் மீக்கொள்ள, வாயுலர்ந்து, ஆதித்தனை நிகர்தத இராமருடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தான்."

இனிக் கம்பரின் முறைப்படி வாலி கழறும் மொழிகளைக் கருத்துட்கொள்ளலாம். "என்னைக் கொல்லுமாறு நீ யேன் தருமத்தினின்று விலகினாய்; நீ தருமத்தைவிட்டதனால் நான் இங்ஙனம் வீணை தீதுற்றேன்" என்னும் வாய்பாட்டினுள் வாலி கூறிய வடமொழி வாசகங்கள் அனைத்தும் அடங்கும். தமிழிலே இவன் அதனை வழங்குங்கால், "நீ யேன் உனக்குத் தீமை புரிந்துகொள்ளுமாறு என்னைக் கொன்றாய்" என்ன மெல்லமெல்ல அதன் உள்ளுறை பொருள் மாறிவிடுகின்றது. இவ்விரு வாய்பாடுகளுக்கும் இடையேஉள்ள வேற்றுமை நுண்ணிதேயாயினும் சிறிது சிந்திக்குமளவில் புலப்படுவது அருமையாகாது. வான்மீகத்தில், இராமன் இழைத்த பொல்லாங்கினால் தீதுற்ற தன்னை நினைத்து மனம் புழுங்கி வெருள்கின்ற வாலி கம்பரது நூலில் அதற்கு மாறாக, தீதுசெய்த இராமனைக் குறித்து இரங்குகின்றான். வாலியின் கருத்தின்படி இராமன், இச்செய்கையால், தன் குலத்திற்கும் உலகத்திற்கும் தருமத்திற்கும் வீரத்திற்கும் அவனுக்கேயும் தீது செய்து அனைத்தையுங் கெடுத்தனன் என்பதொன்றே வாலியின் மனக் குறைபோல் தோன்றுகின்றது. அதனிடையில் தானே இன்னுயிர் துறக்கநேர்ந்த செய்தியோ இவன் சிந்தனையில் கலக்கக் காண்கிலம். இராமபிரானடைந்த இத்தனைவகை நஷ்டங்களுக்குத் தான் காரணமானதுபற்றியே பெரிதும் வருந்துகின்றானன்றித் தன்னுவி போவதை ஒன்றாக மதித்திலன் எனனவே கருதும்படி கம்பரது நூலின்கண் வாலியின் வாய்வரு மொழிகள் நிகழ்கின்றன.

முதலில், இராமனது செய்கையால் அவனைப்பெற்றவற்கும் அவனுடன்பிறந்தவற்கும் நேரவல்லபழியை நினைத்து வாலி இரங்குகின்றான்—

வாய்மையுமரபுங்காத்துமன்னுயிர் துறந்தவள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் றோன்றி னையே
தீமைதான்பிறரைக்காத்துத்தான்செய்தாற்றீங்கன்றோ
தாய்மையுமன்றி நட்புந்தருமமு தழுவிநின்றாய்.[மோ

[சத்தியத்தையும் தன்குலத்துமரபையும் பாதுகாக்கும் பொருட்டு, அறுபதினாயிரவருடம் நிலைத்திருந்த தன் உயிரைத் துறந்த வள்ளலும் தூய்மை வாய்ந்தவனுமாகிய தயரதன் மைந்தனே, நீ உத்தமர்களில் உத்தமனாகிய பரதனுக்குத் தமையனாகப் பிறந்தனையே. உலகத்தில்வைத்த தாய் போன்ற அன்புமாத்திரமேயன்றி நட்பும்தருமமும் தழுவி நின்றவனே, மற்றவர் தீமைசெய்யாதபடி தடுத்துவிட்டுத் தானேசெய்தால் அது தீங்கு ஆகாமற் போய்விடுமோ!]

பின், இச்செயலால், உயிர்களுக்கு உறுதிபயக்கும் நலன்களெல்லாம் நிலைதளரச் செல்வாக்கற்றுவிடுமே என்று சோர்கின்றான்—

குலமிது கல்வி யீது கொற்றமீ துற்று நின்ற
நலமிது புவனமூன்று நாயக முன்ன தன்றோ [மை
வலமிதிவ்வுலகந்தாங்கும்வண்மையீதென்றாற்றிண்
அலமரச்செய்யலாமோவறிந்திருந்தயர்ந்துளார்போல்

[உன்குலமோ இது, கல்வியோ இது, வெற்றியோ இது, நீ பெற்றிருக்கின்ற நன்மையோ இது, மூன்று உலகங்களுக்குந்தலைமைஉன்னுடைமையன்றோ! உன்வலிமையோ இது, இவ்வுலகத்தைக் காக்கும் உன் வண்மையோ இது. அனைத்தும் இவ்வாறாக, இவைகளை அறிந்திருந்தும் மறந்தவர்போல் இக்காரியத்தைச்செய்து அதனால் இந்த உறுதிகளெல்லாம் அலமந்து நிலைகலங்கும்படி புரியலாமோ]

குலம் கல்வி கொற்றம் நலம் நாயகம் வண்மை ஆகிய இவை, "நாமெல்லாம் உடனிருந்தும் அடாத செய்கை இது இராகவன் செய்தானென்றால், நன்னெறியில் ஒருவரை உய்க்குந் திறமை நமக்குஇல்லை போலும்" என அலமந்து நிற்குமே என்று வாலி யிரங்குவது, "இனி இவ்வுலகத்தினர் இன்னவைகளில் நம்பிக்கை வைக்காமல் கெடுவார்களே" என்று பொருள் கொள்கிறது. அவைகளை அப்படி அலமரச்செய்பவன் தானும் தன் மனம் தடுமாறிய நிலையினனாதல் வேண்டுமென்பதை உன்னி,

கோவியற் றரும முங்கள்
குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா
வுருவத்தோ யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற
வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலுஞ் செய்கை

[சித்திரத்தில் எழுத இயலாத வடிவழகு உடையவனே, இராஜ தர்மமானது உங்கள் குலத்தில் உதித்தவர்களுக்கெல்லாம் உரிமையானதொன்று அன்றோ! எனின், உன் ஆவி போன்றவளை, ஜனகன் பெற்ற அன்னம் போன்றவளை, அமிர்தம் போல் உனக்குக்கிடைத்தவளை, உன் தேவியாகிய அச்சீதையைப்பிரிந்தபிறகு திகைப்புற்று இதனைச் செய்தாய் போலும்]

எனக் கேட்கின்றான். இக்கேள்வி, இராமனது செய்கைக்கு ஓர் அமைதி வாலியே அவனுக்குக் கற்பித்துத் தருவதுபோல் அமைந்திருக்கின்றது. அதுவுமன்றி, ஏனையோரை இரமிக்கச் செய்யலாம் பிறர் பிறர்; தன்னால் வதையுண்டு கிடக்கும் ஒருவனே தன்னை, 'ஓவியத் தெழுதவொண்ணா வுருவத்தோய்' என்று அழைக்கும்படி இளக்கவல்ல வடிவம் இராமனுக்கே யுளது. அத்தகை யழகுடைய வொருவன் செய்கை திகைத்தித செய்ததற்குச் சாத்திர விதியும் உளதோவென்று ஆராய்ந்தானென்ன இவ்வாலி,

அரக்கரோ ரழிவு செய்து
கழிவரே லதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கமெங் குகுத்தா யென்பா
லெப்பிழை கண்டா யப்பா
பரக்கழி யிதுநீ பூண்டாற்
புகழையார் பரிக்கற் பாலார்

[அரக்கர் உனக்குஒரு தீங்குசெய்து போவாரேயானால் அதற்காக, வேறு ஒரு குரங்கினத்து அரசனைக் கொல்ல வேண்டுமென்று மனுதர்மசாஸ்திரம் கூறியிருக்கின்றதோ! உனது கருணையை எங்கே சிந்திவிட்டாய். என்னிடத்தில் என்ன குற்றத்தைக் கண்டாய். நீயே இந்தப் பெரிய பழியை ஏற்றுக்கொண்டால் இனிப் புகழைத் தாங்கவல்லவர் வேறு யார் இருக்கின்றனர்]

என இரங்கி,

ஓலிகட லுலகந் தன்னி லூர்தரு குரங்கின்மாடே
கலியதுகாலம்வந்து பரந்ததோகருணைவள்ளால்[னும்
மெலியவர் பாலதேயோ வொழுக்கமும் விழுப்பந்தா
வலியவர் மெலிவு செய்தாற் புகழன்றி வசையுண் டாமோ

[கருணை வள்ளலே, ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில், ஊர்ந்து திரிகின்ற குரங்குகளிடத்தில் மாத்திரம், கலிகாலம் முன்னரே வந்து பரவிவிட்டதோ! நல்லொழுக்கமும் உயர்ந்த குணங்களும் மெலியவர் இடத்திற்றான் இருக்கவேண்டுமோ; வலியவர் இழிவானவைகளைச் செய்தாலுமவர்களுக்கு அதனால் புகழே உண்டாகுமன்றிப் பழி உண்டாகாதோ]

எனக் கேட்குமிது மிகப் பழைய கேள்வி. அறன்வலியுறுத்தினார் ஏனையோர்; மற்று, வலியோர் ஆற்றியதே அறம், (Might is right) என்ற எதிர்நிலையைச் சாதிப்பதற்கோ இராகவன் தோன்றினன்! வாலிக்கு இது ஒவ்வவில்லை. இராமன் செய்த இதனை மக்கள் அடிபற்றி உலகம் கெடுமே என மாழ்குகின்ற மனத்தினனாய் அவ் வானரவீரன்,

அறைகழ லலங்கல் வீர
ராயவர் புரிவ தாண்மைத்
துறையென லாயிற் றன்றே
தொன்மையி னன்னூற் கெல்லாம்
இறைவனீ யென்னைச் செய்த
தீதெனி லிலங்கை வேந்தன்
முறையல செய்தா னென்று
முனிதியோ முனிவி லாதாய்

[ஒலிக்கின்ற வீரக்கழலையும் மலர்மாலையும் அணிந்த வீரர்களாயுள்ளவர், எது செய்கின்றனரோ அதுவே, ஆண்மைக்கு உரிய காரியம் என்று சொல்லும்படி ஆய்விட்டதே. பழமையான நல்ல சாஸ்திரங்களுக்கெல்லாந் தலைவனான நீ என்னை இப்படிச்செய்துவிட்டாயென்றால், இலங்கைக்கு அரசனான இராவணன் தகுதியற்ற காரியம் செய்தானென்று கோபிக்கின்றாயோ, இயற்கையில் கோபமில்லாதவனாகிய நீ]

மீண்டும், அறமே ஆண்மையென்னும் விழுமிய ஒழுக்கத்திற்கு மாறாக, ஆண்மையே அறம் என்னும் பழி வளர்க்கும் எண்ணம் உலகிடைப் பரவுவதற்கு இராமன் செய்த காரியம் காரணமாகுமோவென அஞ்சுகின்றான். இதற்கிடையில் வாலிக்கு ஓர் ஐயம் பிறக்கின்றது—

கூட்டொரு வரையும் வேண்டாக்
கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வ மாங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமஞ் செய்தா
யெம்பிக்கிவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய்
கருமந்தா னிதன்மே லுண்டோ

[துணையாக ஒருவரையும் வேண்டாத வெற்றியுடையவனே, உன்னைப் பெற்ற தந்தை உனக்குக்கொடுத்த அரசசெல்வத்தை அப்பொழுதே உன்னுடைய தம்பியாகிய பரதனுக்குக் கொடுத்து நாட்டில் ஒரு காரியம் செய்தாய். என் தம்பிக்கு இந்த என் அரசாட்சியைக் கொடுத்துக் காட்டில் ஒரு காரியம் செய்தாய்; இதன்மேலும் இப்படியே காரியம் வேறு ஏதேனுஞ் செய்யுங் கருத்து உனக்கு உண்டோ]

எனக் கேட்கின்றான் வாலி. உண்டு உண்டு! பழக்கம் பொல்லாதது. பின்னர் இலங்கையிலும் இராவணனை யகற்றி வீடணனுக்கு அரசுகொடுக்க நிற்கின்றான் இவ்விராமன். வருவ தறிந்தான்போல் வாலி வினவிய இது வாய்மையாகிவிடுகின்றது. பின்,

இருவர்போ ரெதிருங் காலை
யிருவரு நல்லுற் றாரே
யொருவர்மேற் கருணை தூண்டி
யொருவர்மே லொளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி
வாயம்பு மருமத் தெய்தல்
தருமமோ பிறிதொன் றாமோ
தகுதில தென்னும் பக்கம்

[இரண்டு பேர் எதிர்த்துப் போர் செய்யும் பொழுது, உனக்கு அவ்விருவரும் ஒரே சமமான உறவினர் போன்றவர்களா யிருக்கவேண்டியது போக, அவர்களில் ஒருவர் மேல் கருணைகொண்டு, மற்றவர்மேல் மறைந்து நின்றுன் கட்டமைந்த வில்லை நன்றாக வளைத்து, கூரிய அம்பை மார்பினுட் செலுத்துதல், தருமமோ அல்லது வேறு ஏதேனும் ஆகுமோ! பக்ஷபாதம் தக்கது அன்று என்று சொல்லப் படுமே]

என, இராமன் செய்த குற்றத்தின் தன்மை இன்னதென்று எடுத்துக் காட்டுகின்றான். இராமன் தகவுடைய அமைதி கூறவேண்டியது இதற்கே. வாலி மாபெரும் பாவங்கள் செய்துளான் என்று செப்புவது இதற்கு விடையாகாது. "இருவர் பொர நீ மறைந்து நின்றுஎய்தது தகவோ" என்ற கேள்விக்கே உத்தரம் வேண்டும். இது நினைவிலில்லாவிடின், வாலிவதையினமைதியைப்பற்றிப் பேசுவதெல்லாம் மற்றொன்றுவிரித்தலாய் முடியும்.

ஐயமும் அமைதியும்

[448-வது பக்கத் தொடர்ச்சி]

"தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கவே"

இராம சரிதையைக் கம்பரும் வான்மீகரும் அருளிய உரைகொண்டு அறிஞர் தணிகாசலமுதலியாரவர்கள் வெளியிட்ட ஆராய்ச்சிக் கட்டுரையில் அடியேற்கெழுந்த ஐயம் இவையென்று வரைந்ததற்கு முதலியாரவர்கள் தொகுதி 7, பகுதி 28-ல், அமைதிகூறியிருக்கின்றார்கள். "தேவபாடையினிக்கதைசெய்தவர் மூவர், அவர்தம்முளு முந்திய நாவினுரையின்படி நான் தமிழ்ப்பாவினலிதுணர்த்திய பண்பு" என்ற கம்பர், தம் உரைப்படி செய்யத்தவறினரென்பர் முதலியாரவர்கள். முதனூல் இருக்கவும் வழிநூல் செய்யப்புகுவோர்க்கு வேண்டும்விகற்பங்கூற உரிமையுண்டென்று முதலியாரவர்கள் ஒப்புக்கொண்டு, ஆனால், கம்பர் "பழையன கழித்தும், புதியன புகுத்தியும் கால

வகைக் கேற்றவாறு இராமாயணம் பாடுகிறேன்" என்னாது "முந்திய நாவினா ருரையின்படி" என்றே தெள்ளத் தெளியச் சொல்லிவிட்டதால், வேண்டும் விகற்பங் கூறும் உரிமை அவருக்கில்லையென வற்புறுத்துகின்றார். ஆனால், வழிநூல் செய்தோர் முதனூலை அப்படியே முழுதும் பின்பற்றி வரைந்திருக்கின்றேனென்றாவது, பெரிதொழித்துச் சிறிது மாறுபட்டுவரைந்திருக்கின்றேனென்றாவது கூறியிருப்பதாகத் தெரியவில்லை. "உரையின்படி" என்னுமத் தொடர் "கூறிய யாவும்" என்னப் பொருள் தருமாயினும், சிற்சில மாற்றிஉரைத்தல் அத்தொடருக்கு முரணாகிவிடுமென்று துணிதற்கில்லை. வழிநூலுக்கு இலக்கணங் கூறப்புகுந்த ஆசிரியர் "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி" என்ன மொழிந்திருக்கின்றார். "ஒருங்கொத்து" என்ற அத்தொடருக்கு "முழுவதும் ஒத்து" என்று உரையாசிரியர்கள் பொருள் வரைந்திருக்கின்றனர். முழுவதும்ஒத்து என்ற பின்னர் வேண்டும் விகற்பத்திற்கு இடமேது? பவணந்தியார்க்குச் சிறப்புரை கூறியுள்ள ஒருவர், "முன்னோர் நூலின் வழியே, நன்னூற் பெயரின் வகுத்தனன்" என மொழிந்திருக்கின்றார். ஆனால்,பவணந்தி முனிவர் முன்னோர் நூலிற் பல கொண்டும், பல விடுத்தும் இருக்கிறார். பாரதம் பாடிய வில்லிபுத்தூராழ்வார் "வியாதனார் வகுத்த, எண்ணிலா நெடுங்கதையை யானறிந் தியம்பல்" என்று தனக்கு முதனூல் இன்னதெனக் கூறியிருப்பினும், வியாசபாரதமன்றி வேறு சில பாரதங்களையும் பின்பற்றி வரைந்திருக்கிறார். ஆனால், அவர் "பழையன கழித்தும் புதியன புகுத்தியும்" பாடுவதாகவோ, வியாசரன்றி வேறு சில ஆசிரியர்களையும் பின்பற்றி மொழிவதாகவோ முன்னுரை கூறவில்லை. கம்பர் விடுப்பன விடுத்தும் வேண்டுவன சேர்த்தும் புதியன புகுத்தியும் பாடியது இம்மரபுபற்றித்தான் ஆதல்வேண்டும். "முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க" முழுமகனும்நினையானாகலின் ஒப்புயர்வற்ற திப்பியக்கவிஞர் "வான்மீகியையே பின்பற்றி யாவும் கூறினேன்" என்ற பொருளில் "முந்திய நாவினாருரையின்படி நான் தமிழ்ப் பாவினாலிது உணர்த்திய பண்பு" என்ற தொடரை வழங்கியிருக்க மாட்டார். ஆனால் தீர்க்கதரிசியாகிய அப்புலவர் பெருமான்,

"வைய மென்னை யிகழவு மாசெனக்
கெய்தவு மிதியம் புவதியா தெனில்
பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"

என்று கூறியிருப்பதைச் சிந்திக்குந்தோறும் உளதாகும் வியப்போ அளவிறந்து பெருகுகின்றது. எனவே கம்பர் இராமரை அறவுணவு கொண்டவராகக் கூறியதும், தசரதனை அரசர்களுக்கரசனாக்கி அவனாட்டில் "கலம் கணக்கிலா நிதியம் சுரக்கு"மாறு செய்ததும் தவறோ பிறவோ நாம் காண்பதற்கில்லை. கோசலநாட்டு நான்கு திக்குக்களிலுமுள்ள தேசமன்னவர் தசரதற்கு உட்பட்டுக் கப்பம்தருபவரென்று வான்மீகியோ மொழியவில்லையென முதலியாரவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் வான்மீகி தசரதனைக் கௌசிகர் வாய்கொண்டு "சிற்றரசர்கள் எல்லோரும் உமக்கு அடங்கியிருக்கிறார்களா? நீர் உமது சத்துருக்களை அடக்கிவிட்டீரா?" என வினவுகின்ற முறைகொண்டு நாம் என்ன அநுமானிக்கலாம்?

ஆரியரனைவரும் வைணவர்கள் (வா. 7. ப. 312) என வரையும் முதலியாரவர்கள் ஆரியராகிய இராமரைச் "சிவபக்தர்" எனல் எங்ஙனம் முறையாகும்? "கங்கையே முதலிய கலந்த நீரினால், மங்கல மஞ்சன" மாடியபின்னர், "என்று நான்முகன் முதல் யாரையாவையும், நின்ற பேரருளினை நீக்கி நீனெறி, சென்று மீளாக்குறி சேரச் சேர்த்திடு, தன் திருநாமத்தைத் தானுஞ் சாற்றி" அணிபணிகள் பல பூண்டு, "தன்னையே யனையதோர் கோலந் தாங்கிய" இராமபிரானது திருமணக்கோலக் காட்சியைக் கம்பர் நமது நினைவிற்குக் கொண்டுவருகின்றார். "சிவபக்தனான இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமலிங்கப் பிரதிஷ்டை நிறைவேறியதென்பது, இராமர் உலக இயற்கை நடையை நடத்திக்காட்டிய சைவ நீதியாம்" என்ற முதலியாரவர்கள் கூற்று உலக இயற்கைக்காகவன்றி இராமர் பக்திமேலிட்டுச் செய்ததாகப் புலப்படுத்தவில்லை. மேலும் "சிவபக்தரான இராவணாதியரைச் சங்கரித்த இராமர் அப்பாவம் நீங்குவதற்குச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தது வைணவ சமயத்தாருக்கு ஒவ்வாது போலும்" (வா. 7. ப. 324) என்னலால், வைணவராகிய இராமர்—மறம் தொலைத்து அறம் நிலைநிறுத்த அவதரித்தருளிய ஐயன் சைவ வுலக இயற்கையைத் தான் நாம் என்மீறவேண்டும் என்று இலிங்கப்பிரதிஷ்டை செய்திருப்பரோ என்னவோ துணிதற்கில்லை.

விசுவாமித்திரர் அகத்தியர் முதலிய முனிவர்களினருளைக் கொண்டே இராமர் அரக்கர்களைக் கொன்றனரென்று கம்பர் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. இராமரைத் தசரதர் தர மறுத்ததும் கௌசிகருக்குக் கண்கள் சிவந்தன. உடனே வசிட்டர் "நின் மகற்கு உறுத்தலாகலா வுறுதியெய்தும் நாள் மறுத்தியோ" "நின்மகற்கு அளவில் விஞ்சை வந்தெய்து காலமிது, ஆதலின் மறுதனுப்புக" என்றதும் தசரதன் தன் மகனைத் தர இசைகின்றான். ஆனால் அளவில் விஞ்சை வந்தெய்துவதைப் பொருட்படுத்தி வசிட்டர் கூறியதாகவோ, அதனைப் பெரிதென மதித்துத் தசரதன் தன் மகனைத் தர இசைந்ததாகவோ நாம் இங்குக் கொள்வதற்கில்லை. அந்த அளவில் விஞ்சைகள் வந்து இராமனை யடையத்தக்கனவேயன்றி, இராமன் சென்றவற்றைப் பெறவேண்டியது இல்லை. "பெய்யு மாரியால் பெருகு வெள்ளம் போய், மொய்கொள் வேலைவாய் முடுகுமாறு" போலவும், "தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்களெல்லாம், மாறிய பிறப்பிற்றேடி வருவபோலும்" அவ் வளவில் விஞ்சைகள் வந்து இராமனை யடையத்தக்கவை யாதலின் அதற்கென வசிட்டமுனிவர் வற்புறுத்தியிருக்கமாட்டார். ஆனால், "கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப் பிரிந்தவர் கூடும்" பெற்றிமைக்குக் கௌசிகர் துணைநிற்கின்றாரென்பதைக் கருதியே "உறுத்த லாகலா வுறுதியெய்தும் நாளை மறாதே" எனக் கூறியிருத்தல் வேண்டும். குலகுருவின் குறிப்பை அவர்வாசகத்தா லறிந்தகொ

ற்றவனும் தனது பெறலரும்புதல்வனை யனுப்பப் பெரிதும் தயங்கிய தன் திகைப்புநீங்கித் "திருவின்கேள்வனைக் கொணர்மின்" எனப் பணிக்கின்றான். கௌசிகர் தம் தவத்தின் பெருமை உலகறிந்த தொன்றாகலானும், வேள்விக்குத் தீக்ஷைபண்ணிக்கொண்டிருக்கும் அவர் கோபமும் கொலையும் செய்தல் கூடாமையானும், இராமனது உண்மைநிலையை யறியாமல் மயங்கும் அரசனைத் தேற்றும் நிமித்தம் "என்பெரும் சேமம் தன்னால் ஏவரு நிருதர்சேனை இராமனேயெளிது கொல்லும்" எனக்கூறியிருக்கவேண்டுமல்லது, தன் அருள் இன்றெனின் இராமனால் அரக்கரை யழிக்கவியலாது என்று கௌசிகர் ஒருசிறிதும் நினைத்திரார் என்பதுதான் பொருத்தமாகத் தோன்றுகின்றது.

மறப்பு மனிதத்தன்மைக்குரிய குணமாகும். இராமாவதாரத்தின் நோக்கம் அரக்க ரழிவேயன்றிப் பிறவன்று. ஆதலின் அக்கருமத்தில் ஈடுபட்டிருந்த ஐயன் தனது இளவல் பரதனிடம் கூறிவந்த நாட்கணக்கை மறந்தது வியப்பிற்குரியதொன்றன்று. "கலியாணச்சந்தடியில் தாலிகட்ட மறந்ததைப்"போல் இன்றியமையாதவற்றை மறந்துவிடுவதுதான் மனிதருக்கியல்பாகவிருக்கிறது. தன்னை எங்ஙனமாவது அழைத்துச்சென்று முடிசூட்டவேண்டுமென அரும்பாடுபட்ட பரதன் தனது வருகையால் துயருறுவானென்று இராமர் நினைத்திருப்பாரோ என நாம் சிறிதும் ஐயுறுதற்கில்லை. ஆனால், இராமன் மனிதத்தன்மையொடு நடந்தானென்று காட்டவிரும்பிய வால்மீகர் சுக்கிரீவன் செயலை மனத்துட்கொண்டு அரசுபெறுவதற்கு முன்பிருந்த பரதனது இயல்பு அரசுபெற்ற பின்னர் மாறியிருக்கலாமோ என்று ஐயுறுதல் மனிதர் இயல்பாதலின் அத்தகைய சொற்களை இராமன் வாய்வைத்து வழங்கியிருக்கலாம்.

இராமன் மணலைக் குவித்து இலிங்கப் பிரதிஷ்டை செய்தது அவன்செய்யும் சந்தியாவந்தனத்தைக்காட்டிலும் சிறப்புடையதல்ல என அறிஞர் முதலியாரவர்கள் மொழிவது வியப்புத் தருகின்றது. "அராவணை துறந்துபோந்து அயோத்தி யெய்திய" இராகவன்—"தன் திருநாமத்தைத் தானும் சாற்றிய" ஐயன்,இராவணவதத்திற்குப் பின்னர் இலிங்கப் பிரதிஷ்டை செய்த செயலினும் மக்கள்மனதை யீர்க்கக்கூடியசெயல் பிறிதொன்றிருப்பதாகத் தோன்றவில்லை. இலங்கையினின்று பரத்துவாசர் ஆசிரமமடைந்த இராமர் அங்கிருந்து அயோத்திக்குச் செல்லலாமா வேண்டாவா என்னைச் சிந்திக்கநேர்ந்ததன் நுட்பம் யாவதாயிருக்கலாம் என எத்துணைத் தூரம்சிந்திப்பினும் புலனாகவில்லை. இச்செய்தி வால்மீகர் செவிமடுக்கநேர்ந்ததற்கும். இராமர் சிவபூசைசெய்தமை அறியவியலாமற்போனதற்கும் இடசமீபம் போக்குவரவு முதலிய இவைகள் அன்றி வேறு சமாதானமிருப்பின் நலமாயிருக்கும்.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

தபோவனம்

[537-வது பக்கத் தொடர்ச்சி]

மனிதன் தன்னை இருவேறு வகைகளில் அறிந்து கொள்கின்றான். ஒன்று தன்னுள்ளேயே தன்னுடனே கொண்டிருக்கின்ற உறவினாலும்,மற்றது,அவன் தனக்குப் புறமாக விருக்கின்ற பிரகிருதியோடு பூண்கின்ற உறவினாலும் ஆகும். ஒன்று போகத்தின் நெறி, மற்றையது யோகத்தின் நெறி. பாரதநாடு இந்த யோக நெறியையே தனக்கு உரிமையாகவேற்றுக்கொண்டது. இதனால் நாம் உணரவேண்டியது ஒன்றுண்டு. அதுதானென்னவெனில்,சௌந்தரியமேனும்மகிமையேனும் எங்குச் சிறந்துவிளங்குகின்றதோ அவ்விடமே பாரதநாட்டின் புண்ணியஸ்தலம் ஆகும் என்பதாம். மானுடசித்தத்துடனெவ்விடங்களில் விச்வபிரகிருதியானது இயற்கையாக ஐக்கியப்படுகின்றதோ அவ்வவ்விடங்களே பாரதநாட்டின் மிக்க பவித்திரமான தீர்த்தஸ்தலங்களாம். இந்த க்ஷேத்திரங்கள் மனிதருடைய யாக்கைக்குப் பயன்படக்கூடியவைகளொன்றையும் அளிக்கமாட்டா. உழுது பயிரிடுதற்கும் இங்கு இயலாது, வசிப்பதற்கும் இயலாது. பொருளீட்டற்குரிய உபகரணங்களொன்றும் அங்குக் காணமாட்டோம். இது எவ்வரசனுடைய தலைநகரமும் அன்று. இன்னவைகள் தாம் இருந்தாலும் இத்தகைய க்ஷேத்திரங்களில் அவைகளோ முக்கியமானவைகளல்ல. இங்கு மனிதன் நிகிலத்துடன் இணங்கி ஐக்கியமடைந்து தன்னை ஆன்மாவே அனைத்துமாய்ப் பரந்து விசாலப்பட்டிருக்குந் தன்மையை அறிந்துகொள்கின்றான். தன்னுடைய தினசரி வாழ்க்கைக்கு உபயோகமான தொன்றாய் அப் புண்ணிய ஸ்தலங்களை மனிதன் கருதுவதில்லை. ஆன்மாவை அறிந்துகொள்வதற்குச் சாதனமாக இருந்தபடியாற்றான் இந்த ஸ்தலத்தை மனிதன் புண்ணியக்ஷேத்திரமாகக் கொண்டான்.

இந்திய நாட்டில், இமயமலை பவித்திரமானது;விந்தியம் பவித்திரமானது; மனிதருக்கு இடைவிடாமல் உணவு கிடைக்கும்படி பாய்கின்ற நதிகள் புண்ணியமானவை. ஹரித்வார் ரிஷிகேசம் கேதர்நாத் பத்ராச்ரமம் கைலாஸம் மானஸரோவர், கங்கையும் யமுனையும் சேருமிடம், கங்கை சமுத்திரத்துடன் சேரும் இடம் ஆகிய இவைகள் யாவும் பவித்திரமானவை. இவைகளெல்லாம், ஒளியினால் கண்ணைத் திறந்து பார்க்கும்படியும் அனலினால் அனைத்தையும் வளரும்படியும் செய்கின்ற சூரியனைக்கொண்டும், நீராடத் தூய்மைசெய்யும் பல நதிகளைக் கொண்டும், ஜீவனைக் காக்கும் அன்னத்தைக் கொண்டும், நானா இடங்களிலிருந்து தோன்றும் சப்தம் கந்தம் வர்ணம் முதலியவைகளால் மனிதனுடைய சித்தத்தை விழிப்படையவைத்தும் நிகழ்கின்ற பிரகிருதியின் மத்தியில் இப்பாரதநாடு தனது பக்தியை விருத்திசெய்துகொண்டது, உலகத்தை இப் பாரதநாடானது தன் பக்தியினால் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது. போகத்தினால் மாத்திரம் அங்கீகரித்துப் பெருமையடையவில்லை. ஆயினும், அலக்ஷியத்தினால் இவ்வுலகத்தைக் கருமக்ஷேத்-

திரமாகிய தன்னிடத்திலிருந்து வேறாகத் தள்ளியும் வைக்கவில்லை. விச்வபிரகிருதியுடன் சேர்ந்தே இந்தப் பாரதநாடு தனது விசாலத்தையும் சத்தியத்தையும் அறிந்துகொண்டது. இங்குள்ள தீர்த்த ஸ்தலங்கள் இக்கருத்தையே எடுத்துரைக்கின்றன.

கல்வியைப் பெறுவது கலாசாலைகளில் மாத்திரமே அன்று. முக்கியமாக அது மாணாக்கனையே பொறுத்திருக்கின்றது. மாணவர் அனேகர் ஒரு வித்தியாலயத்திற்குச் செல்கின்றனர்; அங்கு, பட்டங்கள்தான் பெறுகின்றார்களேயன்றி கல்வியொன்றும் பெறுவது இல்லை. இவ்வண்ணமே அனேகர் தீர்த்த ஸ்த்தலங்களுக்குச் செல்கின்றாராயினும் அதன் உண்மைப்பலனை அடைகின்றவர் மிகச்சிலரே. ஏனெனில் இவர் பார்க்கவேண்டியவைகளைப் பார்ப்பதில்லை; அடையவேண்டியவைகளை அடைவதில்லை. கடைசிவரையில் அவர் வித்தை, புத்தகங்களுக்குள்ளும் தர்ம ஆசாரங்களின் கட்டுப்பாடுகளுக்குள்ளும் அடங்கினதாகவே இருக்கின்றது. ஸ்தலங்களுக்குச் செல்பவர் செல்வதையேபுண்ணியமாகக்கருதுகின்றார்களன்றி அங்குச் சென்று தாம் அடையவேண்டி நிற்பதுவே புண்ணியம் என்பதைச் சிந்திப்பதுமில்லை. அங்கங்குள்ள நீரிலோ மண்ணிலோ ஏதோ ஒரு சிறப்புஉளதென்று தம் மனத்தில் ஜனங்கள் எண்ணிக்கொள்கின்றனர். இதனால், மனிதருடைய இலக்ஷியம் தவறிவிடுகின்றது. இதனால், மனிதரது சிததத்திற்கு மிக எளிதில் எட்டக்கூடியதாக அருகிலிருக்கின்ற தொன்றை வெகு தூரத்திற்கப்பால் தாம் விலக்கி அகற்றிவிட்டு மிக்க நஷ்டமடைகின்றனர். மனிதன் தனக்காகப் பற்பல சாதனையின் பாதைகளைச் சிருஷ்டிசெய்துகொள்ளக் கூடிய சக்தியை எத்துணைக்கு எத்துணை யிழந்திருக்கின்றானே அத்துணைக்கு அத்துணைப் பொருளற்ற சடங்குகளும் ஆசாரங்களும் அதிகமாகின்றன. இதனை உண்மையென்று உணர்ந்து நாம் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும். ஆயினும்பாரதநாட்டின் தற்கால இந்தத் துர்க்கதியே என்றென்றைக்கும் நிரந்தரமாக இருந்துவிடும் என்று நான் எண்ணவில்லை.

ஏதோ ஒரு நதியில் முழுகுவதால் தானும் தன்னுடைய முன்னூற்று முப்பதுகோடி முன்னோரும் சுவர்க்கம் அடைந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கைக்கொருபொருள் இருப்பதாக நானே கொள்ளமாட்டேன். அல்லது இந்த நம்பிக்கையை நான் பெரியதொருசெல்வமாகவும் பாராட்டவுமாட்டேன். எனினும், தான் ஆடும் அந்நீரையே எவனொருவன் தன் அங்கங்களாலும் முழுமனதினாலும் பவித்திரமாகக் கருதுகின்றானே அவனே பக்திக்கு உரியவன் என்று நான் மதிக்கின்றேன். இவ்வாறு நான் மதிப்பதற்குக் காரணம் இருக்கின்றது. பொதுவாக ஜனங்கள் ஆற்று நீரை ஒரு சாதாரணமான பொருளாகவேயெண்ணி அலக்ஷியம் செய்வது வழக்கம். அதிகமாக ஒன்றுடன் பழகுவதால் ஏற்படும் அலக்ஷியமாகிய இது மடமையேயன்றி வேறன்று. ஒருவன் தன் அனுபவத்தினாலாவது, அல்லது தன் அறிவினாலாவது இந்த மூடத்தனத்தைப் போக்கிக் கொள்வானானால் பிறகு, ஆற்றின் ஜலத்தோடு அவனுக்கு உண்டாகும் சம்பந்தமானது சரீரசம்பந்தமாக இருக்காமல் அறிவின் சம்பந்தமாகவே மாறித்தோன்றும். இவ்வாற்றின் மூலமாக, இனி, பரம அறிவானது அவனது அறிவைப் பிரகாசிக்கச் செய்துவிடும். இப்பிரகாசத்தின் மூலமாக, அவன் குளிக்கும் அந்நீரானது, அவனது உடலின் அழுக்கை மாத்திரமல்லாமல் அவனுடைய அறிவின் மோக மயக்கங்களையும் அகற்றிவிடுகின்றது.

அக்கினி ஜலம் மண் அன்னம் இவைகள் தம்முள்ளே அடக்கியிருக்கின்ற இரகசியம் அனந்தமாயினும், இவ்வுலக நடமாட்ட பாவனையில் அழுக்குடையவை போலவே அவை நமக்குத் தென்படுகின்றன. எனினும், நானாவித கருமானுஷ்டானங்களின் மூலமாக, அவைகளின் தூய்மையை யறிந்துநாம்சரணம்செய்வதற்குரிய விதிகள் பல உண்டு. இந்த அறிவினால் இப்படிச்சரணம்செய்யக்கூடிய மனிதன், அவைகளுடன் கொள்கின்ற சம்பந்தத்தின் மூலமாக விச்வ பிரகிருதியுடன் கலந்துபெறுகின்ற ஒரு பெரிய சத்தியத்தையெய்தி ஓர் மகத்தான சித்தியடைந்தவனாகின்றான். குளிக்கும் நீர் உண்ணும் உணவு அனையவைகளை அசாதாரணமான சிறப்புடையவைகளாகச் செய்வதே அறிவாம். இது மூடத்தனமாகாது. நம் பழக்க நடமாட்டத்தில் வழங்கிவரும் சாதாரணமான பொருள்களை, அவை சாதாரணமாக இருப்பதுபற்றியே இழிவாகக் கருதுவதுதான் மூடத்தனமாம்.

இப்பாரதநாட்டில் ஒரு பெரிய ஜாதியைச் சேர்ந்த அனேக கோடி ஜனங்கள் மீன் ஊன் முதலிய உணவுகளை முற்றிலுந் தள்ளிவிட்டிருக்கின்றர். உலகத்திலே இத்தகையவொரு சம்பவம் வேறெங்கும் காண முடியாது. வேறு எத்தேசத்திலும் மாமிச ஆகாரத்தைத் தள்ளிவைத்திருக்கும் ஒரு சாதி இந்தப் பாரத நாட்டில் இருப்பதுபோல் இருக்கவில்லை.

இவ்வண்ணம் பாரதநாடு மாமிச போஜனத்தைத் தள்ளி வைத்திருப்பது துறவறத்தின் சாதனைகளின் பொருட்டாக அன்று; தன் சரீரத்தை இளைக்கச் செய்து அதனால் ஒரு விசேஷமான புண்ணியத்தையடையும்பொருட்டு மன்று. உயிர்க்கொலை செய்வதனால் ஒரு ஜீவனுக்கும் மற்றொரு ஜீவனுக்கும் இருக்கின்ற சம்பந்தம் நஷ்டமடைகின்றது. நாம் புசித்து வயிற்றைநிரப்புகின்ற பதார்த்தங்களென்றேநாம்பிராணிகளை எண்ணுவோமானால், பிறகு, ஒருபோதும் அவைகளின் உண்மையான ரூபத்தைப் பார்க்கமாட்டோம். அல்லாமலும், உணவிற்காக மாத்திரம் அன்றிப் பிராணிகளை விளையாட்டாக வேட்டையாடிவதைசெய்வதும் வழக்கமாக வந்துவிடுகின்றது. இத்தகையவோர் சிந்தனைக்கிடமான மூர்க்கத்தினின்று மனிதரைக் காப்பதற்கே பிரயாசைப் பட்டிருக்கின்றது இப்பாரதநாடு.

மலர் வனம்

கண்டனரிருவருங் காதலுற்றனர். அன்றுமுதல் தோழியின் துணையினால் தன் காதலனைத் தனியிடம் தலைப்பட்டு இன்புறுவாளாயினள். அவளன்னையோ இதனை யறியாள். நாட்கள் பல கழிந்தன. தலைமகன் இவளை வரைந்துகொள்ளற் குரியவொன்றும்மொழிந்தானல்லன். எனினும், "தலைவ, இன்னும் எத்துணை நாள் இக்களவொழுக்கமே நாம் பூண்டொழுக இயலும் அன்றியும், நின் நன்மனையாட்டி என்னும் பண்புடையொருசொல்யானெய்தவேண்டாவோ. இதற்குரியனசெய்தி" என்ன அவன்பால் நேரேசொல்லின், வலியத் தன்னை அவன்கைச் சேர்க்கும் சூழ்ச்சிபோலாமென நாணி அன்னதுரைக்கத் தலைவியும் ஆற்றாள், தோழியுமாற்றாள். எனினும் தம்முடைக்குறிப்பைத் தலைமகன் உணர்தலும் வேண்டும்.

முத்தம் திரட்டிச் சிற்றில் கோலிக்கோலிச் சிதறுமிப்பேதைநல்லார், "இனி உற்றார் அறிய இவளைவரையாமற் றீராது" எனத் தலைமகன் கருதும் வண்ணம் புரியுஞ் சூழ்ச்சிகள் பலவுள. காதலின் உபாயம் கழிபெரு நலத்தது. "நம்முடை யொழுக்கத்தினை அன்னையறியின் என்செய்கோ" எனப் பரிந்துபேசித் தலைமகனை வரைவின்கண் முடுக்குவார். ஊரலருரைத்து ஊக்கஞ்செய்வார். அதரின் அருமை பரிவுடன் கூறி அவனை அகற்றமுயல்வார். இனையன இன்னும் எத்தனையோபல. ஆயினும் அண்ணலோ அசையான். நாளை மனையறத்தினும் இன்றைய களவொழுக்கமே சுவை மிக வுடைத்தெனும் புல்லிய நினைவால் அவன் வரைதல் தாழ்த்து வாளா விருப்பவனல்லன். வரைந்து கொள்ளற் கின்றியமையாத பொருள் தேடப்போகுமோர் பிரிவிற்கஞ்சியே, தலைமகள் குறிப்பினைத்தான் அறிந்தும் அறியான்போல் நடிக்கின்றான் இத் தலைமகன். இதற்கிடையில் வரைவு நீடித்தல்பற்றிக் கவல்கின்ற தலைமகளின் தோள்கள் இளைக்கின்றன. 'அதுகண்ட அவ்வூரார் பலவாறு தம்முள் வம்புமொழிகள் வளர்க்கவே அவை அன்னை செவியை எட்டிவிடுகின்றன. அன்னை தன் நன்மகளின் நிலைகண்டு கவல்கின்றாள். கவன்று, பூசாரியைக் கொண்டு வெறியாட்டுவித்து, தன்மகள் இளைப்பதன் காரணத்தைத் தெரிந்துகொள்ளக் கருதுவாளாகின்றாள். இதன்முனிப்படிச் செய்தோர் எத்தனையோ தாயர். இத்தனை பேருக்கும் அப்பூசாரி, "நின்மகளை முருகன் பற்றிக்கொண்டுளன் காண்" எனவே தான் ஆட்டிய வெறியின் முடிவாகக் கூறியுளன். நன்று.

இதனை உட்கொண்டின்று ஓர் உபாயஞ் சூழ்கின்றாள் தோழி. களவொழுக்கம்நடைபெறும்படியோர் தனியிடத்தில் தலைமகளுடன் காத்திருக்க அவ்விடத்திற் கருகே தலைமகன் வந்து நிற்பதைக் காண்கின்றாளவள். கண்டு, வெறியாட்டிற்கு அன்னை ஆயத்தஞ் செய்கின்றாள் என்பதனை அவன் அறிவானாயின், ஒருகால் வரைந்துகொள்ள விரையலாமென உன்னி, அவன் செவியிற்படும்படி தன் தலைவிக்கு உரைத்தவோர் செய்தியை, தீன்மதி நாகனார் ஒற்றக்கேட்டு நமக்குரைக்கின்றார்; நண்பர்காள் வந்து கேண்மின்.

மென்றோ ணெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவே ளென்னு மன்னையும்
அதுவென் றுணரு மாயி னாயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் செழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

[நங்காய், உனது மெல்லிய தோள்களை வாடச் செய்த துன்பமானது, மிக்க வெற்றியையுடைய முருகவேளால் கொடுக்கப்பட்டது, என்று பூசாரி கூறுவானாயின், உனது அன்னையும் அதுவே உண்மையென்று நம்பியும் விடுவாளானால், அப்பொழுது, அவள் அறியாமையைக் கருதி நம் வீட்டிலுள்ளோர் சிரிக்கின்ற பெருஞ்சிரிப்பைச் சிறிது காண்பதற்கு, குள்ளமான கரிய பெண்யானையின் கை மறைந்தாற்போலவிளக்கமுற்றபெரியகருங்கற்பாறைகள் செறிந்த செழிப்புற்றமலைநாடன் விரைவாக வருவானாக]

இந்தப் பெருஞ் சிறிப்பைச் சிறிது காணப்பெற்றவர் பாக்கியம் பெரிது பெற்றவர். இல்லோர் பெருநகை கேட்பதன் முன்னே, இங்கு அயலே மறைந்து நின்ற தலைமகன் புரிந்த வொரு நகையொலி இந்நங்கையர் செவியகஞ் சேர்ந்திருத்தல்வேண்டும். எனின்,

முட்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்
புணரிய விருந்த ஞான்றும்
இன்னது மன்றோ நன்னுதற் கவினே

[முள்ளை வெளியே காட்டும் வளைந்த முதுகுப்புறத்தையுடையஇறாமீனின் பெருங்கூட்டத்தைக் கடலின்மோதும் அலைகள் கரைமீது ஒதுக்கும் நீர்த்துறைவனாகிய தலைமகன் உன்னை மணந்துகொள்வதற்கு இருக்கும் இந்நாளிலும் உனது நல்லநெற்றியின் அழகு இவ்வாறு சிதைந்து போயிற்று, இஃது ஏனோ]

என்று, நம்பி குட்டுவனார் பாடியபடி தோழி அத்தலைமகன் கேட்குமாறு பேசிய இது நற்பதம் பார்த்துப் பேசிய சொற்களே. இதுகேட்ட பின்னும் வரையார் தொழுகுவான் உளனேல் அவன், ஆலந்தூர் கிழார் பாடியபடிபேசிய தலைமகள் சொல்லைக் கேட்டால்பின் அரைக்கணந் தாழான்—

கௌவை யஞ்சிற் காம மெய்க்கும்
எள்ளற விடினே யுள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முறிந்து நிலம்படாஅ
நாருடை யொசிய லற்றே
கண்டிசின் றோழி யவருண்டவென் னலனே.

[அயலார் கூறும் அலர் மொழிக்கு நான் அஞ்சி நான் என் காதலருடன் கொண்டிருக்கும் களவொழுக்கத்தை விடுவேனாயின் என் காமம் தேய்ந்து கெடும். அவ்வாறு பிறர் ஏசுதல் ஒழிய இக்காமத்தை நான் விட்டால்தான் என் நாணம் நிலை நிற்பதாகும். இப்படிக் காமத்தையுந் தவிர்க்கமாட்டாமல் நாணத்தையும் விடமாட்டாமல் வருந்தி யழிவதும் தலைவரால் நலன் அழிந்ததும் ஆகிய எனது நிலை, பெரிய யானை வளைத்தலால் முறிந்தும், முற்றுமொடிந்து தரையில் விழாமல் நார்ப்பற்றினையுடைய மரக்கிளைபோல இருக்கின்றது. தோழி இதனைநீ காண்பாயாக]

தோழி இதனைக் காண்பானேன். கண்டுங் காணான் போ லிருந்த தலைமகன் இதனைக்கேட்டாற்போதுமே.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. டி.மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்

KALANILAYAM
REG. NO. M. 2324.

கலாநிலயத் தமிழ் வகுப்பு—வில்லிவாக்கம்

இவ்வகுப்பு, வில்லிவாக்கம், புஷ்பமகாலில், இந்த நவம்பர் மாதம் 12௳ திங்கட்கிழமை, மாலை 7-மணிக்கு ஆரம்பமாகி, அன்று முதல் ஒவ்வொரு வாரமும், திங்கள் வியாழக்கிழமைகளில் மாலை 7-மணி முதல் 7-45-மணி வரையில் நடைபெறும். சேர விரும்புவோர் வந்து சேர்ந்துகொள்ளவும்.

வர்த்தமானம்

அற்புத யோகி:—காசி கிருபாளபுரி மகந்துவின் சீடரான ஒருவர் ஒரு புதுமையான யோக சமாதியில் இருந்தாராம். நவராத்திரி முதல்நாளன்று அவர் தம்மைக் கழுத்து வரை புதைக்கும்படி சொன்னாராம். அந்தப் புதைத்த மண்ணில் கோதுமை விதைக்கப்பட்டது. கோதுமை முளைத்து ஓரடி உயரமாயிருந்தது. அசைவின்றி இவர் சமாதியிலிருந்தார். விஜயதசமி தினம் தனது சமாதியினின்று அவர் எழுந்தாராம். அவரை ஆயிரக்கணக்கான ஜனங்கள் தரிசனம் செய்தார்கள்.

* * *

பெரும் புத்தக சாலை:—சென்ற வாரத்தில் அரசர் பெருமான் திறந்துவைத்த கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையின் புதிய புத்தக சாலையில் ஒன்றரை லட்சம் புத்தகங்கள் இருக்கின்றனவாம். புத்தகசாலைக் கட்டடம் மூன்று லட்சம் பொன் செலவில் கட்டப்பட்டதாம். அந்தப் புத்தக சாலையில் நாற்பது வரியுள்ள அற்புதமான பைபிள் புத்தகமொன்றிருக்கிறதாம். அது 1456-ல் மெயின்ஸ் நகரத்தில் அச்சிடப் பட்டதாம். அதனை 50,000 பவுனுக்கு இன்சியூர் செய்திருக்கிறார்களாம்.

தங்கப் புத்தர்:—சென்ற வாரத்திற் கொழும்பைச் சேர்ந்த பியாகாலா என்ற இடத்தில் எலபோடா விகாரம் என்ற பௌத்தமடத்தில் இந்திய தேசத்துத் தங்கத்தால் செய்த புத்த விக்ரகத்தைக் காட்சியில் காட்டினார்களாம். அந்த விக்ரகம் இருபத்திரண்டு ராத்தல் நிறையுள்ளதாம். அது நாலரை லட்சம் ரூபாய் மதிப்புள்ளதாம். அது எழுநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுபோகப்பட்டதாம்.

* * *

107 வயதில் நடனம்:—சைலீஷியாவிலுள்ள எலிஜபெத் ரொகோஸ்கா என்னும் 107 வயதடைந்த மாது இன்னும் நடனம் செய்து வருகிறார்களாம். அவளுக்கு 50 பேரக் குழந்தைகளும் 60 கொள்ளுப் பேரர்களும் 30 கொள்ளுப்பேரர்களுடைய மக்களும் இருக்கிறார்களாம். எனினும் இந்த மாது ஒரு நாளாவது நடனம் செய்யாமல் இருப்பதில்லையாம். அவள் கூட்டத்தோடு சேர்ந்து நடனம் புரியச் சமயம் வாய்க்காவிட்டாலும் தானாகவே தனியே நடனம் செய்து வருகிறார்களாம். நடனம் முதுமை வராமல் தடுத்து இளமையைப் பாதுகாக்குமாம்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

Branch Secretary, 362, China Bazar Road, Esplanade, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906௵ ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தயா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)